நம் இருவரைப் பற்றி ஒரு அற்புதமான விஷயம் உள்ளது.

உண்மையில் நாங்கள் ஒருவரே.



அந்த மழலைச் செல்வம் தான் உங்கள் உலகம். அவனுக்குத் தாருங்கள் ஒரு அன்பளிப்பை. அதை வாஞ்சையுடன் போற்றி மகிழ்வான் என்றென்றும்.

சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்ட்.

உங்களின் ஒரு அங்கமே உங்கள் மழலைச் செல்வம். அவனது அங்கத்தில் நீங்களும் ஒன்றாகத் திகழ்கிறீர்கள். இந்த பந்தத்தைக் கொண்டாட அவனுக்கு யூடிஐ–ன் சில்ட்ரன்ஸ் கிஃப்ட் குரோத் ஃபண்டை அன்பளிப்பாக தாருங்கள். 15 வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தைக்கும், ஆண்டிற்கு 12% உறுதிப்படுத்தப்பட்ட வருவாய். வருவாய் தானாகவே மறுமுதலீடு செய்யப்படும். முதலீடு செய்யப்பட்ட ரூ.10,000 வளர்ந்து 21 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ரூ.1,08,000 ஆகிறது. குறைந்தபட்ச முதலீடு ரூ.2,000. உச்ச வரம்பு கிடையாது. மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள யூடிஐ கிளையை, முக்கிய பிரதிநிதியை அல்லது முகவரை அணுகவும். உங்கள் குழந்தையின் எதிர்காலம் உங்கள் கையில். இப்பொழுதே அதைப் பத்திரப்படுத்துங்கள்.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான நாளைக்கு

மியூச்சுவல் ஃபண்டுகளில் மற்றும் செக்யூரிட்டிகளில் செய்யப்படும் அனைத்து முதலீடுகள் மார்க்கெட் ரிஸ்க்கிற்கு உட்பட்டவை. செக்யூரிட்டி மார்க்கெட்டுகளை பாதிக்கும் காரணங்களால் திட்டங்களின் என் ஏ வி ஏறவும், இறங்கவும் செய்யலாம். கடந்த கால செயலாற்றல் எதிர்கால விளைவுகளைக் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. சி ஜி ஜி எஃப் என்பது திட்டத்தின் பெயரே தவிர திட்டத்தின் தரத்தை, எதிர்கால வாய்ப்புகளை அல்லது ஆதாயங்களை ஒரு வகையிலும் குறிப்பிடுவதாகக் கருதலாகாது. திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படும் என்று ஒரு உத்திரவாதமும் வழங்கப்பட மாட்டாது. முதலீடு செய்யும் முன் வழங்கு பத்திரத்தை தயவு செய்து படிக்கவும்.

மண்டல அலுவலகம் : 29 இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 5210335, 5210347. **கிளை அலுவலகங்கள்** : கோயம்புத்தூர் போன்: 214973. சென்னை போன் : 5210335, 5210347. மதுரை. போன்: 738186. திருச்சி போன்: 760060.



கோகுலம்

அக்டோபர் '99
மலர்: 17 இதழ்: 9

அன்புள்ள சிறுவர் சிறுமியரே,

ஆவணி பிறந்து விட்டாலே குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். வரிசையாகப் பண்டிகைகள்! விதம் விதமான தின்பண்டங்கள்! கண்ணனுக்குச் சீடை, முறுக்கு! விநாயகருக்குக் கொழுக்கட்டை, விளாம்பழம்! நவராத்திரிக்கு சுண்டல், சுகியன்! தீபாவளியன்றோ பட்சணங்கள் தவிர, அத்தனையையும் ஜீரணிக்க தீபாவளி மருந்து!

சுவாமியா சாப்பிடுகிறார்? அவர் பெயரைச் சொல்லிக் கொண்டு நாமல்லவா வெட்டுகிறோம்! ஆனால் முதலில் அவருக்கு நிவேதனம் செய்யாமல் சாப்பிட அம்மா அனுமதிக்க மாட்டாள். என்ன அர்த்தம்?

அம்மா சமையல் செய்கிறாள் என்றால் அப்பாவும் குழந்தைகளும் ருசித்து மகிழ வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அதற்கும் முன்னதாக 'இறைவனுக்கு இந்த உணவை சமர்ப்பிக்கிறோம்' என்ற உணர்வோடு சமைக்கிறாள். கடவுளுக்குக் காணிக்கையாக்குவதால் சிரத்தையுடன் சமையல் செய்கிறாள். சமைக்கும் போது உடல் தூய்மையுடனும் உள்ளத் தூய்மையுடனும் விளங்குகிறாள். அம்மா குளிக்காமல் சமையல் செய்து பார்த்திருக்கிறோமா? எவ்வளவு அவசரமானாலும் அதிகாலை நாலு மணிக்கே எழுந்து கூட குளித்து, திலகமிட்டுக் கொண்டு, சுவாமி கும்பிட்ட பிறகுதான் சமைக்க ஆரம்பிப்பாள்.

அதுபோலவே, நாம் எல்லாரும் நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் உடல் தூய்மையுடனும் உள்ளத் தூய்மையுடனும் கடவுளுக்குக் காணிக்கையாக்க வேண்டும். படிப்பு, பாட்டு, விளையாட்டு, ஏன், டீவி சினிமா பார்ப்பதைக் கூட! இப்படி எல்லாவற்றையும் இறையுணர்வோடு செய்வதால் என்ன லாபம்? எதையும் சிரத்தையுடன் செய்வோம். ஆண்டவன் நம் பக்கத்திலேயே இருந்து நமது ஒவ்வொரு செயலையும் கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வோடு செயல்பட்டால் கடமை உணர்வு அதிகரிக்கிறது. செயலில் ஈடுபாடு வளர்கிறது. அதனால் சாதனை படைக்க முடிகிறது. அது மட்டுமல்ல, தப்பான காரியம் எதுவும் செய்ய மாட்டோம். பிள்ளையார் நம் பக்கத்திலேயே இருக்கிறார் என்று கருதும் போது விளையாட்டில் அழுகுணி அடிப்போமோ? பரீட்சையில் காப்பி அடிக்கத் தோன்றுமோ? நாள் முழுதும் டீவி பார்த்து நேரத்தை வீணடிக்கத் தோன்றுமோ? இதற்கு மறுபுறமாக நல்ல காரியங்களுக்கு இறைவன் பக்கபலமாக நம்முடன் இருக்கிறான் என்ற எண்ணமும் இருந்து வரும்.



நேர்மை, நல்லொழுக்கம் இவற்றைப் பெறவும் செய் நேர்த்தி அதிகரித்து வாழ்க்கையில் வேகமாக முன்னேறவும் இதைவிடச் சிறந்த உபாயம் கிடையாது.


நவராத்திரியின் போது அம்மா சுண்டல் நைவேத்தியம் செய்கையில் இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

அன்புடன்,


இ. ராஜேந்திரன்
ஆசிரியர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

கோகுலம் அக்டோபர் 1999 இந்த இதழில்...







கோகுலம் வாசகர்களுக்கு ஓர் இனிமையான செய்தி. இந்த இதழ் தொடங்கி மூன்று இதழ்களுக்கு மாதம் ஒரு போட்டி சில மாவட்ட வாசகர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும். இந்தப் போட்டிகளில் ஒவ்வொரு மாதமும் கலந்து கொள்ளும் முதல் 100 வாசகர்களுக்கு ஜாமெட்ரி பாக்ஸ் பரிசாக வழங்க இருக்கிறோம். எனவே போட்டியில் கலந்து கொள்வதுடன் சீக்கிரமாகச் செயல்படுவதிலும் நீங்கள் சாமர்த்தியம் காட்ட வேண்டும்.

இந்த மாதம் மதுரை, தேனி, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட வாசகர்களுக்கான போட்டி :

பரிசுகளை வெல்லுங்கள்!

வகுப்பறை ஜோக்ஸ்.

பிரசுரமாகும் ஜோக்குகளுக்கு சன்மானமும் உண்டு.


விரைவில் மற்ற மாவட்டங்களுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும். காத்திருங்கள்! வாய்ப்பைத் தவற விடாதீர்கள்!

— ஆசிரியர்.

சாதனைச் சிறுமி!



ஐந்து வயதாகும் ஐஸ்வர்யா சென்னையிலுள்ள செட்டிநாடு வித்யாலயாவில் படிக்கிறாள். வயது மிகவும் குறைந்தவளாக இருந்தாலும் இவள் சாதனைகள் அதிகம். கணிதம் என்றால் ஐஸ்வர்யாவுக்கு ரொம்ப விருப்பம். கூட்டல், கழித்தல், பெருக்கல் கணக்குகளை சர்வசாதாரணமாகச் செய்கிறாள். வெட்ப நிலையை செல்ஷியஸிலிருந்து ஃபாரன்ஹீட்டாக மாற்றி சட்டென சொல்லி விடுகிறாள். இது மட்டுமா, உலக நாடுகளின் பெயர்கள், அவற்றின் தலைநகரங்கள், ஸ்லோகங்கள், கர்நாடக சங்கீதம், ஓவியம், விளையாட்டு என இவளின் பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. எதையும் ஒருமுறை கேட்டு சொல்லிவிடக்கூடிய இயல்புள்ள ஐஸ்வர்யாவின் பேட்டி தனியார் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியிருக்கிறது. மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துவோம்!





புதிர் உலகம்



I — தந்திரக் கணக்கு

ஆதனூரில் ஒரு பண்ணையார் இருந்தார். அவருடைய கணக்குப் பிள்ளை கல்லூரியிலேயே முதலாவதாக தேர்ச்சி பெற்ற திறமைசாலி.

அந்தப் பண்ணையார் தன் கணக்கரிடம் ரூ. 1000த்தையும், 10 பைகளையும் கொடுத்தார். அந்த 1000 ரூபாயை பத்துப் பைகளில் கட்ட வேண்டுமென்றும், கட்டியபின் தான் கேட்கும் ரூபாய்களை பைகளை அவிழ்க்காமல் கட்டியபடியே தரவேண்டுமென்றும் (அதாவது 100 ஆகக் கேட்டாலும் பையாகவே தர வேண்டும். பத்து ரூபாயாகக் கேட்டாலும் பையாகவே தர வேண்டும். ஆனால் 3, 4, 5 பைகளாகக் கொடுக்கலாம். பையை அவிழ்க்கக் கூடாது) என்று சொன்னார். பண்ணையார் விரும்பியபடியே கணக்கர் கொடுப்பதானால் ஒவ்வொரு பையிலும் எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும்?

– ஆ. கவியமூர்த்தி,
ஆதனூர்.

II

ஒரு பூச்சி 30 அடி உயரமுள்ள பனைமரத்தில் மெதுவாக ஏறிச் செல்கிறது. ஒருநாள் பகல் முழுவதும் ஏறினால் 5 அடி தூரம் ஏறுகிறது. இரவில் தூங்கும் போது 4 அடி சரிந்து கீழே வந்து விடுகிறது. அப்படியானால் மரத்தின் உச்சியை அடைய எத்தனை நாட்களாகும்?


– பி. சதீஷ்குமார்,
திருப்பூர்.

III — இருபுறமும் ஒரே சொல்!

கீழே இருக்கும் கட்டத்தில் 4 சொற்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் ஒன்றாகவே இருக்க வேண்டும். சொற்களுக்குப் பொருத்தமான குறிப்பு கீழே உள்ளது.

1. உருகிய வெல்லம்
2. பாண்டவரின் தாய்
3. ஆசைகளைத் துறந்தவர்
4. சொல்லிக் கொடுத்தால் திரும்பச் சொல்லும் பறவை


– ஔவை ஏ.எஸ். யோகானந்தம்,
பெரியார் மாவட்டம்.



IV

குருவியும் கழுதையும் நண்பர்கள். இரண்டும் சேர்ந்து நிலத்தில் பயிர் செய்ய விரும்பின. யாருக்கு என்ன பங்கு என்று குருவியே கூறியது. முதலாவதாக பயிர் செய்ததில் மேல் பகுதி குருவிக்கும் கீழ்ப் பகுதி கழுதைக்கும் என முடிவானது. இதில் குருவி லாபம் அடைந்தது. இரண்டாவதாகப் பயிர் செய்ததில் கீழ்ப் பகுதி குருவிக்கும் மேல்பகுதி கழுதைக்கும் என முடிவானது. இதிலும் குருவி லாபம் அடைந்தது. மூன்றாவதாகப் பயிர் செய்ததில் நடுப் பகுதி குருவிக்கும் மேல் பகுதியும் கீழ்ப் பகுதியும் கழுதைக்கும் என முடிவானது. இம்முறையும் குருவியே லாபம் அடைந்தது. கழுதை ஏமாந்தது. மூன்று முறையும் என்னென்ன பயிர்களைப் பயிர் செய்தன?

— டி. மாரியம்மாள்,
ஆண்டிப்பட்டி.



V

இந்தக் கடிகார முகப்பை எந்த வடிவத்திலும் 6 துண்டுகளாய்ப் பிரிக்க வேண்டும். ஆனால் ஒவ்வொரு துண்டிலும் எண்களின் கூட்டுத் தொகை மாறக் கூடாது. உங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டுங்கள்.

— க. சரண்யா, ஆண்டிபட்டி.

விடைகள் :

I

1.00	— பை எண் 1
2.00	— பை எண் 2
4.00	— பை எண் 3
8.00	— பை எண் 4
16.00	— பை எண் 5
32.00	— பை எண் 6
64.00	— பை எண் 7
128.00	— பை எண் 8
256.00	— பை எண் 9
489.00	— பை எண் 10
1000.00	— பைகள் 10

II

26 நாட்கள். எப்படியென்றால் அது ஒருநாள் பகலில் 5 அடி தூரம் ஏறினாலும் இரவில் 4 அடி சரிந்து விடுகிறது. அப்படியானால் ஒரு நாளைக்கு 1 அடி வீதம் 25 நாட்களில் 25 அடி ஏறி விடுகிறது. 26–வது நாள் 5 அடி ஏறி அன்று பகலே உச்சியை அடைந்து விடுகிறது.

III


பா	கு		
கு	ந்	தி	
	தி	யா	கி
		கி	ளி


IV


முதலில் நெல். இரண்டாவதாக நிலக்கடலை. மூன்றாவதாகக் கரும்பு.

V


கடிகார முகப்பிலுள்ள எல்லா எண்களின் கூட்டுத் தொகை 78. அதை ஆறால் வகுத்தால் ஒவ்வொரு துண்டிலும் எண்களின் கூட்டுத் தொகை 13 வரும்.




வெளியே மழை நின்றிருந்தது~
அம்மா இந்தக் குருவிக் குஞ்சுக்குக் காயம் பட்டிருக்கு. மருந்து போட்டிருக் கேன்.
இதை நானே வளர்க்கப் போகிறேன்..!
வேண் டாம், மணி! தாய்க் குருவி இதைக் காணாமல் தவிக்கும்.
தவிப்பு
கதை: மழலைப்பிரியன்
மறு நாள்~
அதுக்கு அடிபட்ட இடம் சரியாப் போச்சும்மா!
சரி! இப்போ அதைப் பறக்க விட்டுடு. அதன் அம்மாவைப் பார்க்காமல் தவிக்கும், மணி! அட்டைப் பெட்டியிலெல் லாம் அடைக்கக் கூடாது.
அன்று மாலை~
என்னடா மணி? வாசல்ல உட்கார்ந்து அழுதுட்டிருக்கே?
அம்மா 4 மணிக்குக் கடைக்குப்போனாங்க. மணி 7 ஆச்சு. இன்னும் வரக் காணோம்...
அப்பா, எனக்குப் பயமா யிருக்கு. அம்மாவை உடனே பார்க் கணும்..
வருவாங்க, நீ வா உள்ளே!


அப்போது அம்மா வர-
என்னம்மா, இவ்வளவு நேரம்? நான் ரொம்பத் தவிச்சுப் போயிட்டேன்.
கடைக்குப் போனப்ப, என் சிநேகிதி ஒருத்தியைப் பார்த்தேன். அவ வீட்டுக்குப் போயிட்டு வந்தேன்... நேரமாயிடிச்சிடா!
அது சரி, ரவி வந்தானா? அவன் கிட்டே சொல்லி விட்டிருந்தேனே!
அவன் வரலை!
படம்:
இருங்க ஒரு முக்கியமான வேலை!
என்னடா பண்ணினே?
அந்தக் குருவிக் குஞ்சைப் பறக்கவிட்டேன்..
அம்மாவைக் காணாமல் நான் பட்ட கஷ்டமே போதும்!
வெரிகுட், மணி!

தொடர்ந்து எதிர் பார்க்கிறோம்!



“சென்ற விடுமுறையில் கல்கியின் பொன்னியின் செல்வன் நாவலை நான் படித்தேன். இடைவிடாமல் இரவு, பகலாகத் தொடர்ந்து பத்து நாட்களில் படித்து முடித்தேன். எளிய நடையில் காட்சி அமைப்புகளைக் கண்முன் நிறுத்திய பொன்னியின் செல்வனைப் போல் இன்னொரு நாவல் படைப்பது என்பது எவராலும் இயலாத காரியம் என்

ஒரு தனி இடம் இருப்பதைத்தான் நீங்கள் அட்டைப்படமாக போட்டு அசத்தியிருக்கிறீர்கள்” என்கிறார்.

“கதைகள், சிரிப்புகள், துணுக்குகள் போன்ற படைப்புகளை யார் வேண்டுமானாலும் அனுப்பலாமா? தேர்வு பெறாத படைப்புகள் திருப்பி அனுப்பப்படுமா?” **என்று ஆத்தங்குடி எஸ். ஆர். சுரேஷ், மதுரை இரா. வீ. விஷ்வா, கொளப்பாக்கம் ஆர். ரமேஷ், நெய் வாசல் பெ. பாண்டியராசன்** கேட்டிருக்கிறார்கள்.

• அன்புள்ள வாசகர்களுக்கு, உங்கள் படைப்புகள் எதுவானாலும் கோகுலத்திற்குத் தாராளமாக அனுப்பி வைக்கலாம். சிறந்த படைப்புகள் பிரசுரமாகும். உங்கள் படைப்புகளை அனுப்பும்போது தபால்தலைகளை இணைத்து அனுப்பினால் தேர்வு பெறாத படைப்புகள் திருப்பி அனுப்பப்படும். இல்லையென்றால் திருப்பி அனுப்ப இயலாது. - ஆர்.

ஆதம்பாக்கத்திலிருந்து எஸ். ஸ்ரீனிவாசன்

என்கிறார்.

• அன்புள்ள ஸ்ரீனிவாசன், உங்கள் ஓவியம் கோகுலத்தில் இடம்பெற ஆசையாக இருந்தால் ஒவ்வொரு மாதமும் அறிவிக்கப்படும் ஓவியப் போட்டித் தலைப்பிற்கே நீங்கள் வரைந்து அனுப்பலாமே! - ஆர்.

“பணமோ-குணமோ, விரிசல் பானை ஆகிய இரண்டு படக் கதைகளும் மிக அருமை” என்கிறார் **வேலூரி விருந்து எம். ஸ்டீவ்.**

தஞ்சை எம். பார்வதி, சேலம் ஆர். வினோத், செஞ்சி கே. பிரபாவதி, உடுமலைப் பேட்டை எஸ். நாகராஜன் - “குளத்தங்கரை வீடு விளையாட்டு நண்பர்களுடன் விளையாடுவதற்கு வசதியாக இருக்கிறது. தொடர்ந்து விளையாட்டுகளை கோகுலத்தில் எதிர்பார்க்கலாமா?” என்கிறார்கள்.

“பேராசை பெரு நஷ்டம்” என்பதற்கு உதாரணமாக மாலதி எழுதிய ‘அறுசுவை விருந்து’ கதையும் தன்னம்பிக்



''ராமு, சைக்கிளைக் கண்டு பிடிச்சது யாருன்னு சொல்லு பார்ப்போம்?''

''யாரோட சைக்கிளை சார்?''

– யமுனா ரெங்கநாதன், மடிப்பாக்கம்.

●●●●●●●●●●●●●●●●●●●●



''டேய் பாம்புப் படம் எடுக்குமா?''

''படம் எடுக்கும். ஆனா ரிலீஸ் பண்ணாது!''

– பி. நடராஜன், அன்னூர்.


●●●●●●●●●●●●●●●●●●●●

''அரசர் கோட்டை விட்டு விட்டார்?''

''எதை?''

''கோட்டை'யைத்தான்!''

- எஸ். மோகன்



இவனாவது பேனாவைத் தருவதாவது' என்று தனக்குத் தானே சமாதானமாகிக் கொள்வான் மனோகர்.

வழிபாட்டுக் கூட்டம் இன்னும் முடிந்தபாடில்லை. இன்னும் கொஞ்ச நேரமாகலாம் என்று தனக்குள் யூகித்துக் கொண்டான்.

அவன் மனத்தில் சன்னமாக ஒரு சபலம் தலை தூக்கியது. எழுந்து செல்வத்தின் இருக்கையருகே சென்று அந்தப் பேனா பாக்ஸைத் திறந்தான். அதனுள்ளே சரிகை உறைக்குள் மெருகு குலையாத புத்தம் புதிய பேனா ஒன்று அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியது. வெள்ளியால் செய்யப்பட்ட அதன் மூடியின் நெற்றியில் 'பார்க்கர்' என்று ஆங்கில எழுத்துகளில் பொறிக்கப்பட்டிருந்த பெயர், அது விலையுயர்ந்த வெளிநாட்டுப் பேனா என்பதைப் பறை சாற்றியது.


'இதை இப்படியே திருடி மறைத்துக் கொண்டால் என்ன' என்ற தப்பெண்ணம் அவன் மனத்தில் தளிர் விட்டது. ஆனால் அடுத்த கணமே, 'சேச்சே; நாம் இன்று பிரேயருக்குப் போகாததற்கும், அதே நேரத்தில் பேனா காணாமல் போனதற்கும் முடிச்சுப் போட்டு நம்மைத்தான் சந்தேகப்படுவார்கள். அதிலும் அவனது பேனாக்களின் மீது எனக்கிருக்கும் மோகம் செல்வத்திற்கு நன்றாகவே தெரியும்' என்று உள்ளூர மனப்போராட்டத்தில் இறங்கித் தடுமாறினான்.

திருடக் கூடாது என்ற திண்ணமான முடிவு அவனுள் உருவானாலும், கூடவே ஒரு குரூரமான எண்ணம் உதயமானது. 'எனக்குக் கிட்டாத ஒன்று இவனுக்குப் பயன்படாமல் போகட்டும்' என்று கருவிக் கொண்டு அந்தப் பேனாவை எடுத்து மூடியைத் திறந்தான். எழுதும் முனையைக் கீழ் நோக்கி வைத்துத் தரையில் ஓங்கிக் குத்தினான். நிமிர்த்திப் பார்த்தபோது சற்று முன் கூர் வாளாகக் காட்சி தந்த தங்க நிற முள், இப்போது உள்வாக்கில் வளைந்து அழுது வடிந்தது. அவசர அவசரமாகப் பேனாவை மூடிச் சரிகையில் சுற்றிப் பெட்டிக்குள் வைத்தான். பாக்ஸைப் பழைய இடத்திலேயே வைத்து விட்டுத் தனது இருக்கைக்குத் திரும்பினான்.

இப்போது அவன் நெஞ்சில் புதிய குழப்பம் குடி புகுந்து குறுகுறுக்கத் தொடங்கியது. 'செல்வம் வந்ததும் பேனாவைத் திறந்து பார்த்துவிட்டு ஆசிரியரிடம் புகார் சொல்லுவானே? விசாரணையில் வழிபாட்டுக் கூட்டத்திற்குப் போகாமல் வகுப்பறையில் இருந்த என் மீதுதானே பழி போடுவார்கள்.'

இந்த எண்ணம் எழுந்த மறு கணமே வகுப்பறையை விட்டு வெளியேறிய மனோகர், மெல்ல நழுவிக் கழிப்பறைப் பக்கமாகக் கம்பியை நீட்டினான். பிரேயர் முடியும் நேரத்திற்காகக் காத்திருந்தான்.

ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே வகுப்பறை



களில் கலகலப்பான பேச்சரவம் கேட்க ஆரம்பித்தது. மாணவர்கள் வகுப்பறைகளுக்கு வந்து விட்டதைப் புரிந்து கொண்டதும் மனோகர் மெதுவாகத் தனது வகுப்பை நோக்கி நடந்தான்.

வருகைப் பதிவு எடுத்துக் கொண்டிருந்த வகுப்பாசிரியர் வாசலில் நிற்கும் அவனைப் பார்த்ததும், "என்ன மனோகர், போஸ்டாபீசில் இவ்வளவு நேரமாயிட்டதா? சரி சரி, வேலை முடிஞ்சதில்லே, போய் உட்கார்" என்று கூறிய வார்த்தைகள் அவனுக்குப் புதிய தெம்பைக் கொடுத்தன. ராஜ நடை நடந்து தனது இருக்கையில் போய் அமர்ந்து கொண்டான்.

இரண்டு பாட வேளைகள் எப்படியோ நகர்ந்து முடிந்தன. இடைவேளைக்கான மணி முழங்கியதும் மாணவர்கள் வெளியேற வகுப்பறை காலியாகிக் கொண்டிருந்தது. கடைசியாக எழுந்து நடந்த மனோகரை மலர்ந்த முகத்தோடு வழி மறித்தான் செல்வம். அவன் கையில் அந்தப் புதிய பேனா பாக்ஸ். அதைப் பார்த்ததுமே மனோகரின் நெஞ்சு 'திக்திக்'கென்று பதற்றத்தில் துடித்தது.

'பேனாவைத் திறந்து பார்த்து நம் மீது சந்தேகப்பட்டு அது பற்றி விசாரிக்கப் போகிறானோ?' என்று நினைத்தபோது நெஞ்சினுள் சிறிய சஞ்சலம்.

'அப்படியென்றால் செல்வத்தின் முகத்தில் ஆத்திரமோ வருத்தமோ எந்த அறிகுறியும் காணோமே!' என்று யோசிக்கக் குழப்பம் தான் கூடியது.

பேனா பாக்ஸை பாசத்துடன் நீட்டிய செல்வம், "டேய் மனோ, நீ ரொம்ப நாளா ஆசைப்பட்டியே வெளி நாட்டுப் பேனா, அதை இப்பத்தான் உனக்குக் கொடுக்க முடிஞ்சது. என்னோட அன்புப் பரிசா இதை வச்சுக்க!" என்று அன்பொழுகப் பேசினான்.

அந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் சம்மட்டி அடிகளாய் விழுந்து இதயத்தை நொறுக்கிப் பிழிவது போலிருந்தது.

'இவ்வளவு பெருந்தன்மையான ஒரு நண்பனிடம் பொறாமையால் எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொண்டேன்?' என்று நினைக்கவே அவமானத்தால் அவன் உடம்பு கூனிக் குறுகிப் போய்விட்டது.


"காலையிலே ஸ்கூலுக்கு வந்ததுமே கொடுத்திடலாமின்னு உன்னைத் தேடினேன். நீ எங்கேயோ போஸ்டாபீஸ் போயிட்டே. பரவாயில்லே; பத்திரமா வச்சுக்கோ" என்று செல்வம் சொன்னான்.

'அவசரப்பட்டு ஆத்திரத்தில் அறிவிழந்து, கிடைக்க இருந்த அரிய பொருளை நானே கெடுத்துக்கிட்டேனே!' என்று உள்ளூர அழத்தொடங்கியது மனோகரின் மனம்.


செல்வத்தின் முன்னிலையில் அந்தப் பேனாவைத் திறந்து பார்த்து அவனது நல்ல மனத்தை நோகடிக்க விரும்பாமல், வாங்கிய பாக்ஸை தனது கால்சட்டைப் பையில் போட்டுக் கொண்டான். தன்னுடைய தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட அவலத்தை நினைத்து நினைத்து நெஞ்சு கனத்தது போலவே அவனது கால் சட்டைப் பையும் கனக்கத் தொடங்கியது.

ஆப்பம் எப்படி இருக்கும்?


கதை : ஏ.ஆர். சுரேஷ்
படம் : மகேஷ்



முனியம்மா பாட்டி ஆப்பம் சுட்டு விற்பவர். ஒரு நாள் அவரது கடைக்குச் சாப்பிட வந்தான் பொன்னையா.



பாட்டி அன்புடன் ஆப்பங்களைப் பரிமாறினார். பொன்னையாவுக்குப் பசி அதிகமிருந்ததால் வேகமாக ஆப்பங்களை விழுங்கினான்.



சாப்பிட்டு முடித்தவுடன் ''சரி பாட்டி, நான் வரேன்'' என்றான்.



பொன்னையா மறந்துட்டியா? இருபது ரூபாய்க்குச் சாப்பிட்டிருக்கே. பணம் கொடு'' என்றார் பாட்டி.




''என்ன பாட்டி கிண்டலா? ஏதோ உன் கடைக்குப் பக்கத்துல உட்கார்ந்திருந்தேன். உடனே சாப்பிட்டேன்னு பொய் சொல்றியே, நியாயமா?'' என்றான் பொன்னையா.




“என்ன பேசறே? இப்பத்தானே சுடச்சுட பத்து ஆப்பத்தைச் சாப்பிட்டே?” என்றார் பாட்டி.



“பாட்டி இந்த வயசுல உனக்கு ஏன் ஏமாற்று புத்தி? சாப்பிடாமல் காசு கொடுக்க என்னால் முடியாது” என்று கூறிவிட்டு நடந்தான் பொன்னையா.




பாட்டிக்கு இப்படி ஏமாற்றுகிறானே என்று ஆத்திரம் வந்தது. அவ்வூர் பண்ணையாரிடம் சென்று முறையிட்டார்.



நடந்ததை அறிந்த பண்ணையார் பொன்னையாவை அழைத்து விசாரித்தார்.



“ஐயா! நான் ஆப்பம் சாப்பிடவில்லை. அது எப்படி இருக்கும்னு கூட எனக்குத் தெரியாது” என்று நடித்தான் பொன்னையா.




யோசித்த பண்ணையார் “நாளை என் வீட்டிற்கு வந்து விறகு வெட்டிப் போடு” என்று கூறினார் பொன்னையாவிடம்.



மறுநாள் பொன்னையா வந்தான். "வா, பொன்னையா. எங்க வீட்ல ஆப்பம் செய் திருக்கோம். சாப்பிட்டு விட்டு விறகை வெட்டு" என்றார் பண்ணையார்.




பொன்னையாவுக்கு நாவில் நீர் ஊறியது. அவன் முன் உணவு வைக்கப்பட்டது.



அதைத் தின்றவன், "என்ன ஐயா, ஆப்பம்னு சொன்னீங்க. வேற எதையோ வச்சிருக்கீங்க" என்றான்.



"இதுதான் ஆப்பம். நீதான் ஆப்பத் தைப் பார்த்ததில்லையே" என்றார் பண்ணையார்.



"இல்லைங்க. ஆப்பம் இதை விட சுவையா இருக்கும். உங்க வீட்டில் சுடத் தெரியலை. முனியம்மா பாட்டி சுடுவதுதான் ஆப்பம். ரொம்ப ஜோரா இருக்கும்" என்றான் தன்னை மறந்து பொன்னையா.



"அப்படியா! மரியாதையா ஆப்பத்துக் கான காசையும் தண்டனையாகக் கூட பத்து ரூபாயும் சேர்த்து பாட்டியிடம் கொடு" என்றார் பண்ணையார். பொன் னையா திருதிருவென விழித்தான்.

1. உச்சாணி மரத்து உயர்ந்த கிளையிலே பட்டாணி இருந்து பாக்கு வெட்டுது – அது என்ன?

2. முறையின்றித் தொட்டால் வரையின்றித் தாக்குவான் – அவன் யார்?

3. சிங்கார மண்டபத்தில் ஆயிரம் நபர்கள். அருகில் போனால் ஊசி போட்டுத் துரத்துகிறார்கள் – அது என்ன?

4. நாலு மூலை சதுரப் பெட்டி, நடுவில் ஓடும் குதிரைக் குட்டி – அது என்ன?


5. அடைமழை பெய்த அடுத்த நாள் படை படையாய் வந்ததாம் பறங்கி நாட்டு விமானம். எதிரி எதிர்த்துச் சுடாமலே சிறகொடிந்து செத்ததாம் – அது என்ன?

– எம்.டீ. பாத்திமா மின்ஷா,
பள்ளி முல்லை, இலங்கை.

விடை : 1. அணில், 2. மின்சாரம், 3. தேன் கூடு, 4. அம்மி-குழவி, 5. ஈசல்.

ஒரு கரண்டி மாவில் உலகிற்கே தோசை

– அது என்ன?



1. ஓடிக் கொண்டே இருப்பேன். யாருக்காகவும் நிற்கமாட்டேன். – நான் யார்?

2. காலிருக்கும் ஆனால் நடக்க முடியாது; கையிருக்கும் ஆனால் எதையும் பிடிக்க முடியாது. – அது என்ன?

3. நாட்கள் செல்லச் செல்ல இளைத்துக் கொண்டே போகிறேன். – நான் யார்?

– எஸ். நீரஜாக்ஷி,
எட்டாம் வகுப்பு, சென்னை.

விடை : 1. காலம், 2. நாற்காலி, 3. நாட்காட்டி.

1. சின்ன மண்டைக்காரன், ஊருக்கே சண்டைக்காரன் – அவன் யார்?

2. ஒரு கரண்டி மாவினால் உலகிற்கே தோசை – அது என்ன?

3. யானை படுக்க நிழல் உண்டு. கடுகு மடிக்க இலை இல்லை – அது என்ன?

4. வெள்ளைத் தோட்டத்திலே கையினால் விதைவிதைத்து வாயினால் பொருக்கி எடுத்தேன் – அது என்ன?

– அன்னை பாக்யா, பாலை.

விடை : 1. தீக்குச்சி, 2. நிலா, 3. கருவேல மரம், 4. பேப்பர், எழுத்து, வாசித்தல்.

1. வளைப்பவர் வளைத்தால் காற்று வேகம் – அது என்ன?

2. கறுப்பு நிலத்தில் வெள்ளை விதைகள். விதைத்ததை எடுக்க முடியாது. ஆனால் அழித்து விடலாம் – அது என்ன?

3. ஆடும் வீட்டிற்குள் அச்சமின்றி பிள்ளைகள் – அது என்ன?


4. வீசியெறிந்தாலும் வீணாய்ப் போகாது – அது என்ன?

5. நரம்பைத் தொட்டால் சப்தமிடுவான் – அவன் யார்?

– ஆர்.வி. மயில்வாகனன்,
பத்தாம் வகுப்பு, டான்பாஸ்கோ
பள்ளி, மதுரை.

விடை : 1. வில் - அம்பு, 2. கரும்பலகை - எழுத்து, 3. தூக்கணாங்குருவிக் கூடு, 4. வயல் - விதைகள், 5. வீணை.

கோபத்தால் கரைந்த வடை!



கந்தன் விறகு வெட்டிப் பிழைப்பவன். அவனுக்கு நிறைய உளுந்து வடை சாப்பிட ஆசையாக இருந்தது. ஒரு வடை இரண்டு வடையெல்லாம் அவன் ஆசைக்குக் கட்டுப்படி ஆகவில்லை.

அந்த ஊரில் பார்வதம்மாள் வடை சுடுவதில் புகழ் பெற்றிருந்தார். கந்தன் அவளிடம் சென்றான். தன் விருப்பத்தைக் கூறி, "இருபது வடைகள் தயாரிக்க என்ன செலவாகும்?" என்று கேட்டான்.

பார்வதம் கந்தன் அப்பாவி என்பதை யூகித்தார். "கந்தா! நீயோ ஏழை. உன்னை ஏமாற்றி நான் மாடி வீடா கட்டப் போகிறேன்! சாமான்களை நீ வாங்கிக் கொடுத்து விடு. கூலி நீ இஷ்டப்பட்டதைக் கொடு" என்று தேனொழுகப் பேசினார்.

கந்தனுக்கு ரொம்ப சந்தோஷம். "சாமான்களைச் சொல்லுங்கள்" என்றான்.

"அரைப்படி உளுந்து, அரைக்கால் படி உப்பு, நூறு கிராம் பச்சை மிளகாய், எட்டணா கறிவேப்பிலை, ஒரு கிலோ எண்ணெய், அவ்வளவுதான்" என்றார்.

கந்தன் பார்வதம் சொன்ன சாமான்களை வாங்கி வந்து தந்தான்.

"எப்போது தயாராகும்? சூடாகச் சாப்பிடலாமே என்று கேட்கிறேன்" என்றான் ஆர்வமாக.

"பதினோரு மணிக்கு வந்தால் வடையை வாங்கிக் கொண்டு போகலாம்" என்றார் பார்வதம் பாட்டி.

கந்தன் அப்படியே வருவதாகச் சொல்லிச் சென்றான். பாட்டி ஆழாக்கு உளுந்து நனைத்தார். ஊறியதும் தேவைப்பட்ட உப்பு, பச்சை

மாலதி

மிளகாய், கறிவேப்பிலை போட்டு அரைத்தார்.

திடீரென்று ஒரு சாவுச் செய்தி வந்தது. துக்கம் விசாரிக்க தாத்தாவை முதலில் அனுப்பிவிட்டு பார்வதப் பாட்டி பின்னால் வருவதாகச் சொல்லி வடை தட்டினார். வடை மொறு மொறுவென்று ருசியாக இருந்தது. இரண்டைச் சாப்பிட்டு விட்டு மிச்சத்தை ஒரு பாத்திரத்



தில் போட்டு மாடி அறையில் கொண்டு வைத்தார். மணி பதினொன்று ஆனதால் கந்தன் வந்து கதவு தட்டினான்.

பாட்டி வாணலியில் இருந்த எண்ணெயை வடித்தார். கல்லுரலைக் கழுவி வாணலியில் ஊற்றினார்.

கந்தன் 'பார்வதம்மாளுக்கு என்ன வாயிற்றோ' என பயந்து கதவை விடாமல் தட்டிக் கொண்டிருந்தான். "இதோ வருகிறேன்" என்றபடியே கதவைத் திறந்த பார்வதம் வருத்தத்துடன், "இப்படியா கதவை உடைப்பாய்? பார் வடையெல்லாம் கலைந்து விட்டது. எண்ணெய்ச் சட்டி அருகில் பேசக் கூடாது. 'இதோ, வருகிறேன்' என்று சொன்னதால் அடுப்புக்குக் கோபம் வந்து வடை மாவை எண்ணெயில் கரைத்து விட்டது. உன் பொருள் எனக்கு வேண்டாம். அந்தப் பாத்திரத்தில் ஊற்றித் தருகிறேன்" என்றபடி உளுந்து மாவும் எண்ணெயுமாய் கூழ் போலிருந்ததை விட்டுக் கொடுத்தார்.

கந்தன் விக்கித்து நின்று விட்டான்.

"ஐயோ! எத்தனை நாள் உழைப்பு! எல்லாம் பாழானதே! எண்ணெய்ச் சட்டி அருகில் பேசக் கூடாதா? இதையேன் பாட்டி முன்பே சொல்லவில்லை? நான் ஒரு மடையன்! பொறுமையின்றி நடந்து கொண்டேன். ஆசையில் மண் விழுந்தது" என்று வருந்தினான்.

பார்வதம் கந்தனை வெளியே அனுப்பிக் கதவைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்.

கந்தனுக்கு மரம் வெட்டப் போக மனமில்லை. எதிரிலிருந்த ஆலமரத்தடியில் அழுது கொண்டிருந்தான்.

பார்வதத்தின் பக்கத்து வீட்டில் வசிக்கும் அன்னபூரணி பார்வதத்தின் எதிரி. அன்னபூரணி வீட்டு ஜன்னலிலிருந்து பார்த்தால் பார்வதத்தின் வீட்டு மாடியில் நடப்பதெல்லாம் தெரியும். பார்வதத்தின் தில்லு முல்லு சமாசாரங்களை அன்னபூரணி வெறுத் தார்.

கந்தனைக் கூப்பிட்டு எல்லா சமாசாரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

"கந்தா! எண்ணெய்ச் சட்டி அருகிலிருந்து பேசினால் வடை கலைந்து விடும் என்பதெல்லாம் சுத்தப் பொய். பார்வதம் ஒரு பாத்திரத்தில் வடையை வைத்து மூடியதை நான் பார்த்தேன். உள்ளே வா. என் வீட்டுக் கூரையிலிருந்து ஏணி வழியாக அவள் வீட்டிற்குப் போக முடியும். நீ போய் வடையை எடுத்துக்கொள்" என்றபடி வழி காட்டினாள். கந்தன் வடைகளை எடுத்துக் கொண்டான். அன்னபூரணிக்கும் இரண்டு வடைகள் கொடுத்தான். பார்வதம் வறட்டி தட்ட சாணி குவித்து வைத்திருந்தார்.

கந்தன் கோபத்தோடு சாணியைப் பாத்திரத்தில் வாரி மூடி வைத்தான். பிறகு அன்னபூரணி அம்மாளின் வீட்டு வழியாக இறங்கி நடையைக் கட்டினான்.

மரணம் நிகழ்ந்த இல்லத்தில் ஓர் உறவினருக்காகக் காத்திருந்தனர். தாத்தாவுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

பாட்டி அருகில் வந்து, "மாடி அறையில் வடை வைத்திருக்கிறேன். போய்ச் சாப்பிடுங்கள்" என்றார். மாடி அறை ஒரே இருட்டு. உள்ளே நுழைந்தார் தாத்தா. பாத்திரம் தென்பட்டது. கையை விட்டார். கையெல்லாம் கொச கொச வென்று சாணி!

பசியோடு ஏமாற்றப்பட்ட ஆத்திரமும் சேர்ந்து கொள்ள தாத்தா குறுக்கும் நெடுக்குமாய் அலைந்து கொண்டிருந்தார்.


பாட்டி 'இந்த மனுஷன் ஏன் திரும்பி வரவில்லை? உண்ட மயக்கத்தில் உறங்கி விட்டாரா?' என்று நினைத்தபடியே வீட்டுக்குள் நுழைந்தார்.

தாத்தா கோபத்தில் கத்த, நடந்ததை அறிந்த பாட்டி விக்கித்து நின்றார்.


''பாழடைந்த இந்த மண்டபத்தை அசோகர் கட்டினார்.''


''அசோகர் பெரிய ராஜாவாச்சே? ஏன் பாழடைந்த மண்டபத்தைக் கட்டினார்? நல்லதா கட்டியிருக்கலாமே!''

– சென்னிமலை சி.பி. செந்திகுமார்.



குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்

1. உலகை முதன் முதலில் சுற்றி வந்தவர் (5)
5. ஆறு, கடல்களுக்கு இது உண்டு (2)
8. இத்தாலியின் தலைநகரம் (2)
9. நாம் உயிர் வாழ ஆக்ஸிஜன் அவசியம்தானே? (2)
12. ஆடம்பரமற்றவர்களைப் பார்க்கும்போது - ஆகத் தோன்றும் (3)
14. துறவியின் வாழிடம் (5)

வலமிருந்து இடம்

2. செய்து காட்டுகிறேன் என துணிவுடன் கூறுவது (3)
4. ஆப்பிள், மாதுளை இந்த வகையைச் சேர்ந்தது (2)
6. இது இல்லாவிட்டால் சொல் போச்சு என்பது பழமொழி (2)
10. ரொட்டிக்குத் தொட்டுச் சாப்பிடும் பழங்களின் கலவை (2)

மேலிருந்து கீழ்

1. முஸ்லீம்களின் புனித தலங்களில் ஒன்று (3)
2. பழக்கம் என்பதை இப்படியும் அழைக்கலாம் (5)
8. பூக்களில் ஒன்று நேருவுக்குப் பிடித்தது (2)
11. மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரை உள்ள அளவு (3)

கீழிருந்து மேல்


3. இறக்கை உள்ள கரையான்கள் (3)
4. கடல் வழி போக்குவரத்துக்குப் பயன்படும் வாகனம் (4)
5. பிறருக்கு உதவும் குணமுடைய குந்தியின் மகன் (4)
6. மார்கழி மாதத்தில் இது அதிகம் பொழியும் (2)
7. கொடியில் காய்க்கும் காய்களில் ஒன்று (2)
9. வீட்டுப் பிராணிகளில் ஒன்று (2)
12. எழுத உதவும் கருவி (5)
13. புயல் ஒரு இடத்தில் நிலைத்து இருப்பதை இப்படியும் கூறலாம் (3)
14. வானம் என்பதை இப்படியும் கூறலாம் (4)
15. சிவப்பு மற்றும் வெள்ளையணுக்களைக் கொண்ட உயிர்த் திரவம் (4)

விடை 72ம் பக்கம்

— செ. அன்னபூரணி,
ஒன்பதாம் வகுப்பு,
உமா மகளிர்
உயர்நிலைப் பள்ளி,
திருச்சிற்றம்பலம்.



தங்கை மீது திடீர் பாசம்!




அடுப்பில்....

என் தம்பி ஏழாம் வகுப்பு படிக்கிறான். விடுமுறை நாட்களில் கிரிக்கெட் பேட்டை எடுத்துக் கொண்டு விளையாட கிளம்பி விடுவான். தினமும் யார் வீட்டு ஜன்னலிலோ அல்லது மனிதர்கள் மீதோ பந்தை அடித்து விடுவான். இதனால் தினமும் யாராவது புகார் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் எனக்குக் கோபம் வந்து, "இங்கே பார், இனிமேல் பேட்டைத் தொடக் கூடாது. உடைத்து அடுப்பில் போட்டு விடுவேன்" என்றேன். அவன் சிரித்துக் கொண்டே "நம்ம வீட்ல விறகடுப்பு இல்லையே, கேஸ் அடுப்புத்தானே இருக்கு" என்றானே பார்க்கலாம்!

– ஆர். நளினி, செம்பனார் கோவில்.

பயம்!

அன்று விடுமுறை. பக்கத்து வீட்டுப் பையன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தான். எங்கள் வீட்டில் உள்ள மீன் தொட்டிக்கு அருகில் சென்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன் திடீரென "ஏன் அண்ணா மீன்கள் என்னைப் பார்த்து



பயந்து ஓடுகின்றன?" என்றான். "உன்னைப் பார்த்ததும் சுறா மீனுன்னு நினைச்சிருக்கும்" என்றேன் நான். உடனே அவன் முகம் கோபம் அடைந்தது. நான் அவனிடம் மன்னிப்புக் கேட்டேன்.

– ஆர்.வி. மயில்வாகனன், மதுரை - 14.


பேபி

என் அக்கா எப்பொழுதும் என்னுடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பாள். அன்று பள்ளி விட்டு வந்ததும் சண்டை வந்தது. வழக்கத்திற்கு மாறாக என் அக்கா என்னைத் திட்டாமல் 'வா பேபி, போ பேபி' என்று கூறிக் கொண்டிருந்தாள். எனக்கு ஆச்சரியமாக



உப்பு?

இந்தக் கோடை விடுமுறையில் ஒரு நாள் அம்மாவிடம் நான் சமைப்பதாகக் கூறினேன். அம்மாவும் சம்மதித்தார். இரண்டு தம்ளர் அரிசி போட்டு உலை வைத்தேன். உப்பு எவ்வளவு போடுவது என்று திடீரென சந்தேகம் வந்தது. அம்மாவிடம் கேட்டேன். ''சாதத்திற்கு அளவாக



உப்புப் போடு'' என்றார் அம்மா. நான் இரண்டு தம்ளர் உப்பை உலையில் கொட்டி விட்டேன். ஆவலுடன் என் அம்மா சாப்பிட ஆரம்பித்தார். ''ஐயோ சாதத்துல உப்பு போடச் சொன்னால் உப்புல சாதத்தைப் போட்டிருக்கியே'' என்றார். ''நீங்கதானே சாதத்துக்கு அளவா போடச் சொன்னீங்க'' என்றேன். ''உனக்கு சரியான அளவைச் சொல்லாதது என் தப்புதான்'' என்றார் அம்மா. சாதம் வீணானது.

– ஆர்.ஈ. ரோஜினி, பத்தாம் வகுப்பு,
அரசு பள்ளி, ஆண்டிபட்டி.



பெரியண்ணா...


நான் ஓய்வு நேரங்களில் மாமாவின் கேசட் கடைக்குச் சென்று அவருக்கு உதவியாக இருப்பேன். ஒரு நாள் மாமா வெளியில் சென்று விட்டார். நான் மட்டும் கடையில் இருந்தேன். அந்த நேரம் ஒருவர் வந்து, ''பெரியண்ணா இருக்கா?'' என்றார். அதற்கு நான், ''வெளியில் போயிருக்கார், உட்காருங்கள், வந்து விடுவார் என்றேன். ''தம்பி, நான் கேட்டது பெரியண்ணா பட கேசட்டை'' என்றார். மன்னிப்புக் கேட்டு விட்டு கேசட்டை எடுத்துக் கொடுத்தேன்.

– ஆர். பாலகுமார், செம்பனார்கோயில்.

பார்த்ததில்லை!

ஊரிலிருந்து மாமா வந்திருந்தார். அவர் பெண்ணுக்கு ''ரவுண்டா ஒரு இருபதாயிரம் ரூபாய் இருந்தால் ஜாம், ஜாம்னு கல்யாணம் பண்ணிடுவேன்'' என்றார். அப்பாவும் ''என்னால இருபதாயிரம் முடியாது. ரவுண்டா பத்தாயிரம் தந்துடறேன்'' என்றார். மாமா ஊருக்குக் கிளம்பிய உடன் என் தம்பி அப்பாவிடம் சென்று ''அப்பா நான் ரவுண்டா பணத்தைப் பார்த்ததில்லை. எனக்குக் காண்பித்த பிறகு மாமாவுக்கு அனுப்புங்கள்'' என்றவுடன் நாங்கள் சிரித்து விட்டோம். பிறகு ''ரவுண்டா என்றால் வட்டம் இல்லை. மொத்தமாகன்னு இங்கு அர்த்தம்'' என்று அப்பா விளக்கினார்.

– பெ. விஜி,
வெள்ளையாம்பட்டு.



இருந்தது. வேலை விட்டு வந்த அப்பாவும் என் அக்காவின் பேச்சால் வியந்து "என்ன உன் தங்கை மீது திடீர் பாசம்? பேபி, பேபின்னு கூப்பிடறே" என்றார். உடனே, "பேய், பிசாசின் முதல் எழுத்துகள்தான் பேபி. நான் கோபத்தில் திட்டிய மாதிரியும் இருக்கும். அவளைச் செல்லமாகக் கூப்பிட்டது மாதிரியும் இருக்கும்" என்றாள் அக்கா. எனக்கு அழுகை வந்தது.

– க. சௌம்யாயனி,
ஆறாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் மகளிர் மேல்
நிலைப்பள்ளி, தூத்துக்குடி.

இளவரசரின்

நந்தன் மிகவும் கெட்டிக்காரன். சாதுர்யமாகப் பேசுவதில் வல்லவன். அத்துடன், சிறியதோ, பெரியதோ, எந்தப் பொருளையும் அலசி ஆராய்ந்து மனதுக்குள் எடை போட்டு, அதன் சரியான விலைமதிப்பைக் கணித்துச் சொல்லி விடுவான்.

நாளடைவில், அவனது திறமை பற்றிய செய்தி, நகரம் முழுவதும் பரவியது. அந்த நாட்டு அரசன் காதிலும் அச்செய்தி எட்டத் தவறவில்லை. உடனே, அரசர் நந்தனைத் தன் சபைக்கு அழைத்து வரச் செய்து, அவனிடம்,



"என்ன நந்தனே! உன்னால் எந்தப் பொருளாக இருந்தாலும், அதன் சரியான விலை மதிப்பைக் கண்டு பிடித்துக் கூறிவிட முடியுமாமே! நிஜமா?" என்றார்.

"ஆம் மன்னவா..." என்ற அவன், "எதற்கு விலை மதிப்புப் போட வேண்டும் கூறுங்கள்?" என்றான்.

அரசருக்கு அருகில் ஒரு சிறுவன் நின்றிருந்தான். அவனைச் சுட்டிக்காட்டிய அரசர், "இதோ நிற்கிறானே என் மகன் - இளவரசன், அவனுடைய உண்மையான விலைமதிப்பைக் கண்டுபிடித்துக் கூறு பார்க்கலாம்..." என்றார்.

நந்தன் அதுவரையில் பொருள்களின் விலை மதிப்பை மட்டும்தான் கண்டறிந்து கூறி வந்துள்ளான். உயிருள்ள பொருள்களைக் கணக்கிட்டதில்லை. இதுவே அத்தகைய முதல் வாய்ப்பு - அதிலும் இளவரசருடைய விலைமதிப்பு! எனவே அவன் பதறிப் போனான்.

முதலில் ஒருக் கணம், நந்தன் தடுமாறிப் போனாலும் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டான். அரசே! இது சாதாரண வேலையில்லை. மிகுந்த கவனத்துடன் செய்ய வேண்டிய பணி. ஆகவே, எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும்" என்றான்.

"அப்படியா! எத்தனை நாள் தேவை?" என்றார் மன்னர்.

"ஒரு மாதம் போதும் அரசே" என்றான் நந்தன்.


அரசர் அவன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். இருந்தாலும் ஒரு நிபந்தனை. "இன்றைக்குச் சரியாக முப்பதாம் நாள்,

விலைமதிப்பு?

நீயாக என் முன் ஆஜராகிவிட வேண்டும். அத்துடன் உன் பதில் சபையினரைத் திருப்திப்படுத்தும்படியாக சரியான பதிலாக அமைய வேண்டும். இல்லாவிட்டால் தண்டனைதான்! சரி நீ போய் வா'' என்று விடை கொடுத்தார் அரசர்.

வீட்டுக்குச் சென்ற நந்தனுக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. சதா அரச குமாரனைப் பற்றிய சிந்தனைதான். சரியான பதிலைக் கூறா விட்டால் தண்டனை என்கிறாரே என்ற பயம் வேறு...

நாட்கள் நகர்ந்தனவே தவிர, உருப்படியான பதில் எதுவும் தோன்றவில்லை. மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டதுதான் மிச்சம்.



அன்று முப்பதாம் நாள். மன்னரைச் சந்தித்து இளவரசனின் விலை மதிப்பைத் தெரிவிக்க வேண்டிய நாள்.

நந்தன் பயந்து நடுங்கிக் கொண்டே அரண்மனைக்குப் போனான். அவன் மனத்தில் 'இன்று தொலைந்தோம்' என்ற கலக்கம்.

'இளவரசரின் விலை மதிப்பைக் குறைத்துக் கூறிவிட்டால், அரசரின் கோபத்துக்கு ஆளாக வேண்டும். அதிகமாகக் கூறிவிட்டாலும் ஆபத்துதான்! 'ஏன் இப்படிக் கூறுகிறாய்? விளக்கம் கொடு' என்பாரே... அப்போது, எந்தப் பதிலை, எப்படி கூறுவது?' நந்தன் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தவாறே சபையினுள் நுழைந்தான்.

அவனைக் கண்டதும் அரசர், "வா, நந்தா! என் மகனின் விலை மதிப்பைக் கணக்கிட்டு விட்டாயா?" என்றார் மிகுந்த ஆவலோடு.

நந்தன் பதில் சொல்ல சற்றுத் தடுமாறினான். என்றாலும், அவனிடம் இயற்கையிலேயே ஒரு

ஜானகிமணாளன்



"இந்த நாடுகளுக்குப் போக விசா வாங்கத் தேவையில்லை. அது எந்த நாடுகள் சொல்லு?"

"தமிழ்'நாடு', ஒரத்த'நாடு', செட்டி 'நாடு'!"

– ஜி. குமரேசன், பாண்டமங்கலம் அஞ்சல்.

திறமை உண்டு. நெருக்கடியான நேரங்களில், அதிசயமான ஒரு சக்தி தோன்றி விடும். அந்தச் சக்தி, அவனைப் புத்தி கூர்மையுடன் சாதுர்யமாகப் பேசவைத்து, அவனைக் காப்பாற்றி விடும். அடிக்கடி அப்படி நடப்பதும் உண்டு.

அந்த நம்பிக்கைதான், அவனுக்கு அரசவைக்குள் நுழையும் துணிவைத் தந்திருந்தது.

அந்தத் துணிச்சலில், அவன் அரசருக்குப் பதில் கூறத் தொடங்கி விட்டான். "ம்... அனேகமாக மதிப்பிட்டு முடித்து விட்டேன், அரசே! என்றாலும் என் மனத்தில் கொஞ்சம் சந்தேகம் நிலவுகிறது. ஆகவே...." என்ற நந்தனுக்கு, மேற்கொண்டு என்ன பேசுவது என்று தோன்றவில்லை.

அதற்குள் குறுக்கிட்ட அரசர், "சந்தேகமா, என்ன அது? தயங்காமல் சொல்" என்றார்.

அரசரின் இந்தப் பேச்சு, நந்தனை ஊக்கப்படுத்துவதாக இருந்தது. எனவே அவன் உற்சாகமாகப் பேசத் தொடங்கி விட்டான். அவனை அறியாமல், அவனுக்குள் ஒரு சுறுசுறுப்பு!

அவன் சற்றுத் தயங்கிவிட்டு, "பிறரைப் பற்றி என் மனத்தில் தோன்றும் எண்ணங்களை மறைக்காமல், உள்ளது உள்ளபடி, நான் ஏதும் கூறப் போய், அது தங்களது கோபத்தைக் கிளறி விட்டுவிட்டால் என்ன செய்வது என்று பயப்படுகிறேன்" என்றான் நந்தன்.

நந்தனின் வெளிப்படையான இந்தப் பேச்சு, அரசருக்கு மிகவும் பிடித்திருந்தது. எனவே அவர், மகிழ்ச்சியோடு, "பயப்படாதே! நீ என்ன கூறினாலும், நான் கோபப்படமாட்டேன். துணிந்து சொல்" என்றார்.

"மிக்க நன்றி மன்னவா" என்ற நந்தன் "எனக்கு ஒரு சிறு ஐயம்... அதைத் தீர்த்துக் கொள்ள, இளவரசரை, நான் ஒரு தடவை, கூர்ந்து உற்று நோக்க வேண்டும். வரச் சொல்கிறீர்களா?" என்றான்.

இளவரசன் வந்ததும், நந்தன் அவனை மிகக் கூர்மையாக நேருக்கு நேர், நோக்கினான். பிறகு, அவனைச் சுற்றி வந்து பல்வேறு கோணங்களில், உச்சி முதல் பாதம் வரையில் உற்றுப் பார்த்தான். இளவரசனின் நெற்றியில் தனது ஆள் காட்டி விரலை வைத்துத் தடவிக் கொண்டே சொன்னான்.

"அரசே! நம் இளவரசரின் தலையெழுத்து விலை மதிப்பற்று விளங்குகிறது. அதே நேரத்தில், அவர் ஒரே ஒரு ரூபாய்க்கு மட்டுமே விலை மதிப்பைப் பெற்றுள்ள உழைப்பாளி" என்றான் நந்தன்.

அரசருக்குச் சட்டென்று, நந்தன் கூறியது புரியவில்லை. ஆனால், சற்று ஆழ்ந்து யோசித்ததும், 'நந்தன் கூறுவது சரிதான்' என்பது புரிந்து விட்டது.

என்றாலும், அந்த விளக்கத்தை நந்தனே சபையினர் முன் கூறட்டுமே என்று கருதி, "என்ன சொல்கிறாய் நீ? விளங்கவில்லையே..." என்றார்.


நந்தன் சொன்னான், "நாடாளுபவரின் மகன் என்பதில் இளவரசரின் விலை அளவிட முடியாது. ஆனால், நம் இளவரசர் கூலி வேலை செய்யப் போனால், அவருக்கு எவரும் ஒரு ரூபாய்க்கு மேல் தினக் கூலி தரமாட்டார்கள்" என்றான்.


மன்னர் மகிழ்ந்தார். நந்தனின் புத்தி கூர்மை அனைவராலும் மெச்சப்பட்டது. அரசர் அவனுக்குப் பொன்னும் பொருளும் பரிசாகக் கொடுத்து, அனுப்பி வைத்தார்.

நானே சிறந்தவள்!

கதை : கே. வைத்தியநாதேஸ்வரன்

படம் : சசி





அன்று இரவு ஆரகென் வீட்டு வாசலுக்கு தேவதை போல் ஒரு பெண் வந்தாள். ஆரகென் 'யார்?' என்று யோசித்தாள்.
''நான்தான் அத்தீனா. காற்றின் தேவதை. உன் திறமையைப் பற்றி நீயே கர்வம் கொண்டிருக்கிறாயாமே?'' என்று கேட்டது.
''அதில் என்ன சந்தேகம்? உன்னை விடவும் என்னால் நன்றாகத் துணி நெய்ய முடியும்'' என்றாள் ஆரகென்.
''உன் தன்னம்பிக்கையைப் பாராட்டறேன். ஆனால் கர்வம் கூடாது'' என்றது தேவதை.
''உன்னால் முடிந்தால் என்னிடம் போட்டி போடு'' என்றாள் ஆணவத்துடன் ஆரகென்.
''போட்டிக்கு நான் தயார். மேகத்தின் கடவுளான ஜூபிடரை நடுவராக அழைக்கலாம்'' என்றது தேவதை.
''நானும் தயார். போட்டியை ஆரம்பிக்கலாம். ''நிபந்தனை என்ன?'' என்றாள் ஆரகென்.
''யாருடையது மிகவும் சிறந்ததென ஜூபிடர் கூறுகிறாரோ அவளே வெற்றி பெற்றவள்'' என்றது தேவதை.
'தோற்றவள் வாழ்நாள் முழுவதும் துணி நெய்யவே கூடாது' என்பதையும் ஆரகென் ஒப்புக் கொண்டாள். போட்டி ஆரம்பமானது.


"ஆரகென் அருமை. இவ்வளவு அழகான துணியை இது வரை நாங்கள் கண்டதில்லை" என்றனர் அனைவரும்.
ஆரகென்னுக்குப் பெருமையாக இருந்தது. அடுத்தது அத்தீனா நெய்ய ஆரம்பித்தாள்.
அத்தீனாவின் துணியைப் பார்த்ததும், "உலகில் இத்துணிக்கு ஈடு எதுவும் இல்லை. அத்தீனா வெற்றி பெற்றாள்" என்றது கூட்டம். ஜூபிடரும், "அத்தீனா தான் வெற்றி பெற்றவள்" என அறிவித்தார்.
"இனி மேல் நான் துணிகளை நெய்யவே முடியாதே!" – அழுதாள் ஆரகென்.
அத்தீனாவிற்குப் பாவமாக இருந்தது. "இப்போதாவது புரிந்ததா ஆரகென்? ஆணவம் கூடாது."
"மீண்டும் நெய்ய வழி செய்கிறேன்" என்று கூறி தன் கையிலிருந்த மலரால் ஆரகென்னைத் தடவினாள்.
என்ன அதிசயம்! ஆரகென்னைக் காணோம். அங்கு ஒரு சிலந்திப் பூச்சி தான் இருந்தது.
சிலந்தியாக மாறிய ஆரகென் வேகமாக மரத்தில் ஏறினாள்.
மரக்கிளைகளுக்கு நடுவே நூல் நெய்ய ஆரம்பித்தாள்.



4. மறுபடியும் சிக்கினர்

நித்யாவும் சத்யாவும் ரங்குடு போவதையே பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் அவர்களுக்கு அவன் மகத்தான ஹீரோவாகக் காட்சியளித்தான். அவன் பாதுகாப்பில் தங்களுக்கு அபாயமில்லை என்ற நினைப்பு ஏற்படவே, மனது லேசாயிற்று. பிச்சுவாவைச் சுழற்றி எதிரியைத் தாக்கி வீழ்த்துவது போல அவன் அபிநயித்த காட்சி அவர்கள் கலங்கிய மனத்துக்கு இதமாக இருந்தது. ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ரங்குடு கூறியது அவர்கள் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டிருந்தது.


"நீங்க என் நண்பர்களாயிட்டீங்க. நான் ராஜமுந்திரியைச் சேர்ந்தவன். ராஜமுந்திரிக்காரங்க நண்பர்களுக்காக உயிரையே கொடுக்கறவங்க. என் பெற்றோர் யாரென்றே எனக்குத் தெரியாது. ஆனா, புஸ்தகக் கடை அரங்கநாதன் சாரை என் அப்பாவா மதிக்கிறேன். அவர் உங்களை எங்கிட்டே ஒப்படைச்சிருக்கார். அந்த ரவுடிங்ககிட்டே இருந்து என் உயிரைக் கொடுத்தாவது உங்களைக் காப்பாத்துவேன் – கவலைப் படாதீங்க!"

"தன் திறமையில் ரங்குடுவுக்கு ரொம்

தங்கச்சிலை!

வாண்டுமாமா

பப் பெருமை, இல்லையா சத்யா?'' – என்றாள் நித்யா.



''பெருமை மட்டுமில்லே – தன்னம்பிக்கை நித்யா!'' என்றான் சத்யா. நித்யா, ரங்குடுவின் குடியிருப்புக் கொட்டகையை நோட்டமிட்டபடி, "இந்தக் கொட்டிலை ரங்குடு தன் பொக்கிஷமாகக் கருதுறான். அவன் உலகமே இதுதான். அப்பா அம்மா இல்லே, 'பசிக்கும்போது சாப்பிட ஏதுமில்லே. ஆனா சந்தோஷமா இருக்கான். தன் ஏழைமையை நினைத்து அவன் துவண்டு போகலே – தைரியமா இருக்கான். ரங்குடுவை நினைத்து நான் பெருமைப்படறேன் சத்யா."

''என் நினைப்பும் இதேதான் நித்யா. பத்திரிகையிலேயிருந்து வெட்டி எடுத்த படமானாலும் இந்த நாய்கிட்டே எவ்வளவு அன்பா இருக்கான் பார்த்தியா?'' என்று சத்யா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தொலைவில் விசில் சத்தம் கேட்டது.

''நித்யா... அந்த ஒலி..? ரங்குடுவோடது தான்... நம்மை உஷார்ப்படுத்தறான்'' என்றான் சத்யா.


குடியிருப்பு வாசலின் தடுப்புச் சாக்கைச் சற்றே விலக்கிப் பார்த்தார்கள். சாலையில் ஒரு டாக்ஸி நின்று கொண்டிருந்தது. அதன் அருகிலிருந்த ரங்குடு இவர்களை நோக்கிக் கையசைத்து வரும்படி சைகை செய்தான். நித்யாவும் சத்யாவும் தங்கள் டிராவல் பாக்குடன் ரங்குடுவை நோக்கி ஓடினார்கள்.

"சீக்கிரம் காரிலே ஏறுங்க... நாம் அரங்கநாதனோட பண்ணை வீட்டுக்கு ஜல்தியாப் போயிடணும். அதுதான் பத்திரமான இடம்" என்று பரபரத்தான் ரங்குடு. அவர்களோடு ரங்குடுவும் பின் சீட்டில் அமர்ந்து கொள்ள, டாக்ஸி

டிரைவர் வண்டியின் கதவைஅறைந்து சாத்திவிட்டு, முன்னால் போய் வண்டியைக் கிளப்பினார்.

ஜனநடமாட்டம் மிக்க நகர எல்லையைத் தாண்டி டாக்ஸி, சந்து பொந்துகளிலும் குறுகிய தெருக்களிலும் புகுந்து கிராமப் பகுதியை அடைந்தது. சிறிது நேரத்தில் அவ்வப்போது தென்படும் குடியானவர்களும் கட்டை வண்டிகளுமே கண்ணில் படும் மண்பாதையில் – 'தையா தையா' என்று குலுங்கியபடி போகலாயிற்று. முட் புதர்களும் குத்துச் செடிகளும் கள்ளிகளுமே நிறைந்த பொட்டலில் டாக்ஸி பயணித்துக் கொண்டிருந்தபோது, 'தட தட... தட் தட்' என்ற மோட்டார் சைக்கிளின் ஒலி கேட்டுத் திடுக்கிட்டு நித்யா – சத்யா – ரங்குடு மூவரும் திரும்பிப் பார்த்தனர். புழுதியைக் கிளப்பியபடி இரண்டு மோட்டார் பைக்குள் உறுமியபடி டாக்ஸியை நோக்கி வந்து கொணடிருந்தன.

"டிரைவர்! வேகமாப் போ... ஜல்தி, ஜல்தி!" என்று கத்தினான் ரங்குடு. ஆனால் அந்தப் பழைய டாக்ஸிக்கு வேகமெடுக்கும் திராணி இல்லை. இரு மோட்டார் சைக்கிள்களும் டாக்ஸியைக் கடந்து சென்றன. அதில் அமர்ந்திருந்தவர்களின் பார்வை, டாக்ஸியினுள் துழாவியது. டாக்ஸியை முந்திக் கொண்டு சற்றுத் தொலைவில் போன மோட்டர் பைக்குகள் 'சடன் பிரேக்' போட்டுப் பாதையின் குறுக்கே நின்றன. ஒரு பைக்கிலிருந்தவன் கீழே இறங்கினான். சரியான முரடன். முறுக்கு மீசையுடன் – அவன் தோற்றமே பீதியுண்டாக்குவதாக இருந்தது. கையில் துப்பாக்கி வேறு. ஊர்ந்து வந்த டாக்ஸிக்கு, அந்த ரௌடிகளின் பைக்குக்கு முன்னால் நிறுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை.



"எதையும் குத்து மதிப்பா சொல்றாரே யார் அவர்?"

"அவர்தான் 'குத்து'ச்சண்டை வீரர் ராஜூ!"

– கே.ஆர். உதயகுமார்

பேச்சேதும் இல்லாமல் ஒரு முரடன், தன் துப்பாக்கி முனையை மட்டும் அசைத்து, நித்யாவையும் சத்யாவையும் டாக்ஸியிலிருந்து வெளியே வருமாறு சைகை செய்தான். அவன் கவனம் அந்த இரு குழந்தைகளின் மீதே இருந்ததால் பின் சீட்டின் அடியில் சட்டென்று பதுங்கி மறைந்து கொண்ட உருவத்தைக் கவனிக்கவில்லை.

நித்யாவும் சத்யாவும் பேச்சற்றுப் போய் கீழே இறங்கியதும் டாக்ஸியின் மறு பக்கத்துக் கதவு லேசாகத் திறக்கப்பட்டு அந்த இடுக்கு வழியே குனிந்தபடி, ரங்குடு நழுவி வெளியேறி பாதையோரத்துப் புதருக்குள் போய் மறைந்ததை யாருமே பார்க்கவில்லை.

மற்றொரு முரடன் டாக்ஸி டிரைவரை மிரட்டிக் கொண்டிருந்தான். அங்கு நடந்ததை யாரிடமாவதோ, போலீஸிலோ போய்க் கூறினால், அவன் பெண்டாட்டி, பிள்ளை குட்டிகள் தெருவில் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்துத் திரும்பிப் போகும்படி உத்திரவிட, டாக்ஸி டிரைவர், விநாடியும் தாமதிக்காமல் வண்டியைத் திருப்பிக் கிளப்பிக் கொண்டு அங்கிருந்து மறைந்தார்.

"எங்களை விட்டுடு... ஒண்ணும் செய்யாதே! நாங்க இந்த ஊருக்குப் புதுசு– காலையில்தான் வந்தோம். எங்களுக்கு ஒண்ணும் தெரியாது... ப்ளீஸ் விட்டுடு எங்களை!" கெஞ்சினாள் நித்யா உடைபட்டக் குரலில்.

துப்பாக்கி வைத்திருந்த முரடன் கோணலாகச் சிரித்தபடி, "உங்களுக்கா

ஒண்ணும் தெரியாது? டெல்லி குழந்தைங்க கில்லாடியாச்சே. நம்ம தோஸ்த் டாக்ஸி டிரைவரை எச்சரிக்கை செய்து அனுப்பியதைப் பார்த்திங்க இல்லையா? ஜெயராஜ் அண்ணனைக் கூட்டி வர அவன் பைக்கிலே போயிருக்கான். சீக்கிரமே வந்துடுவான். ஜெயராஜ் வந்ததும் உங்களை அவரிடம் ஒப்படைத்து விட்டு நாங்க போயிடுவோம்... புரியுதா? என்னைக் கண்டு நீங்க பயப்பட வேண்டாம். நல்ல புள்ளைங்களா நடந்துக்கிட்டா நான் உங்களை ஒண்ணும் செய்ய மாட்டேன்.''


''ப்ளீஸ்.. உங்களுக்குப் புண்ணியமா இருக்கட்டும். எங்களை விட்டுடு'' நித்யாவின் குரலில் அழுகை கலக்கத் தொடங்கியது.

''விட்டுடறதா?''கிண்டலாகச் சிரித்தான் கேடி. ''இந்த அத்துவானக் காட்டில் எங்கே போவீங்க? இருட்டினதும் மிருகங்களெல்லாம் வேட்டைக்குக் கிளம்பிடும். ஜெயராஜ் அண்ணனுக்கு அந்தப் புராதனக் கோயிலிலே புதையுண்டு மறைந்திருக்கும் பொக்கிஷங்க மேலே ஆசை வந்துட்டுது. அவர் ஒண்ணு மேலே ஆசைப்பட்டா அதை அடையாம விட மாட்டாரு. உங்க அப்பாவுக்கு அந்தப் புதையல் இருக்குமிடம் தெரியும். ஆனா சொல்ல மாட்டேங்கறாரு. அவர்கிட்டே இருந்து அந்த ரகசியத்தை அறியத்தான் உங்களைப் பணயமாக்கிப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்காரு அண்ணன். அதுக்கு நீங்க ஒத்துழைச்சா உங்களுக்கு நல்லது. உங்கப்பாவுக்கும் லாபம்... இப்பப் புரியுதா- நீங்க அண்ணனுக்கு எவ்வளவு முக்கியமுன்னு!''

சத்யா முகம் சிவக்க ஆத்திரத்துடன் கூறினான்: ''எங்களை நீ விடுதலை செய்யலேன்னா, எங்க டாடி உங்களை ஜெயிலுக்கு அனுப்புவார்!''

''அம்மாடீ! ஜெயிலுக்கா...? பயமா இருக்கு தம்பி!'' – நாடகமாடினான் அந்த முரடன்.

''நீ ஒரு மிருகம்! தடியன்... ரௌடி!'' நித்யா கத்தினாள்.



''உங்க பையன் 'துரு துரு'ன்னு இருக்கானே, பையன் பேர் என்ன?''

''சந்துரு!''

— தஞ்சை இரா. ஆதி

''நித்யா வீணா சத்தம் போடாதே... நாம அமைதியா இருப்பதைத் தவிர வேறு வழி இல்லே'' என்றான் சத்யா.

''இதுதான் புத்திசாலிக் குழந்தைகளுக்கு அழகு... அதோ அந்தச் சுவர் மேலே போய்க் குந்துங்க. ரோட்டோரத்திலே நின்னா பார்க்கறவங்க சந்தேகப்படுவாங்க... வீண் வம்பு எதுக்கு?'' என்றான் யோக்யனைப் போல, அந்தக் குண்டன்.

சாலையை ஒட்டி இருந்தது ஒரு கண்மாய் - புதர்களால் மறைக்கப்பட்டு. இருவரையும் அங்கு கூட்டிப் போனான். நித்யாவும் சத்யாவும் அந்தச் சுவரின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். சின் வண்டுகள் ரீங்காரமிட்டன. பூச்சிகள் கடித்தன. மாலை இளம் வெயில். அந்தப் பிராந்தியத்தில் நிலவிய அமைதி பயமூட்டுவதாக இருந்தது. இவர்களையே பார்த்தபடி கையில் துப்பாக்கியுடன் அந்தக் குண்டன் சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்தான். அவனிடமிருந்து தப்புவதற்கு மார்க்கமே இல்லை என்பதை அறிந்த குழந்தைகளின் உள்ளம் உடைந்து போயிற்று. ஜெயராஜ் வந்து விடுவான். அதன் பிறகு...

ரங்குடுவைப் பற்றிய நினைவே இல்லாமல், தங்கள் நிலையை எண்ணியே குழம்பிப் போயிருந்தார்கள் குழந்

தைகள். இவர்கள் வலையில் சிக்கிய அப்பா என்னவாகியிருக்கிறாரோ - அவரை ஜெயராஜ் எப்படியெல்லாம் துன்புறுத்துகிறானோ...? இதே நினைப்பில் இருந்தார்கள் நித்யாவும் சத்யாவும். அந்த முரடன் முட்செடியிலிருந்து ஒரு முள்ளை எடுத்துப் பல்லைக் குத்திக் கொண்டிருந்தான் சுவாரசியமாக. அப்போது...

சுவருக்கு அப்பால் உயரமாக செழித்து வளர்ந்திருந்த புல்லில் ஓர் அசைவு - ஏதோ மிருகம் உணவு தேடி, புல்லின் ஊடாகப் புகுந்து போவதினால் சலனம் போல. இந்த அசைவு நித்யாவின் கவனத்தைக் கவரவே, அவள் சத்யாவைத் தன் பக்கம் திருப்பினாள் - குண்டனைக் கண்காணித்தபடியே அக்காவின் உந்துதலினால் சீண்டப்பட்ட சத்யா, அவள் கண் ஜாடை காட்டிய பக்கம் தன் கவனத்தைத் திருப்பினான். அப்போதுதான்- தங்களுக்கு ரங்குடுவின் நினைப்பே இல்லாமல் போன குற்ற மனப்பான்மை உரைத்தது.

குண்டனின் கவனம் திரும்பாதபடி, அவனை நோட்டமிட்டபடியே நித்யாவும் சத்யாவும் புல்லில் சலனம் ஏற்பட்ட பகுதியைக் கவனித்தனர். ஓங்கி வளர்ந்து நின்ற புற்களுக்கு மேலாக இப்போது ரங்குடுவின் தலை எட்டிப் பார்த்து தன் உதட்டில் விரல் பதித்து, 'உஷ்' என்று எச்சரித்தது. ரங்குடு புல்லினூடே தவழ்ந்து போவதை, அலை அலையான அதன் அசைவு தெரிவித்தது. அந்தச் சலனம் குண்டனின் பின்னால் வந்து அமைதியாயிற்று.

இப்போது ரங்குடு, அந்த ரௌடியின் பின்னால், புல் புதரில் மறைந்தபடி இருக்கிறான் என்பதைக் குழந்தைகள் புரிந்து கொணடனர். ஏதோ ஒன்று குண்டனின் கவனத்தைக் குழந்தைகள் பக்கம் திரும்பச் செய்தது. "திடீரென்று உங்க முகத்திலே சந்தோஷம் தெரியுதே - என்ன சமாசாரம்?" என்று கேட்டான், பல் குத்திக் கொண்டிருந்த முள்ளைத் தூர வீசி விட்டு, "தப்பி ஓடலாம்னு ஏதாவது அசட்டுத்தனமா திட்டம் போட்டீங்க - சுட்டுடுவேன் ஜாக்கிரதை!" என்றான்.

"நாங்க எந்தத் திட்டமும் போடலே. உன் முகரக்கட்டையைப் பாத்துச் சிரிச்சுக்கிட்டிருக்கோம்!" என்றான் நித்யா நிதானமாக - அவன் கவனம் புல் புதரின் பக்கம் போய் விடாமல் தங்கள் மீதே



இருக்கும் படி செய்ய வேண்டும் என்ற நினைப்பில்.

"என்னைக் கேலி செய்ய என்ன துணிச்சல் உங்களுக்கு?" என்றான் கேடி, முகம் சிவக்க. "என்னைப் பத்தித் தெரியாது உங்களுக்கு?"

"தெரிய வேண்டிய அவசியமே இல்லை! இரண்டு குழந்தைகளை தீபாவளிக்குச் சுடும் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தும் உன் வீரத்தைப் பற்றி எங்களுக்கு நல்லாவே தெரியும். உன்னோட கொட்டாப்புளித் தலையும், கொடுவாள் மீசையும் பார்க்க சகிக்கலே" என்று கிண்டலடித்தான் சத்யா.

குண்டன் ஆக்ரோஷமானான். கண்கள் கோவைப் பழமாக, குழந்தைகள் இருவரையும் பார்த்துப் பற்களைக் கடித்தான். அவர்களுக்குப் புரியாத தெலுங்கில் ஏசியபடி, கைகளை ஆட்டிக் கொண்டு அவர்களை நோக்கி ஆவேசமாகப் பாய்ந்தான்.

அதே சமயத்தில் ரெளடியின் பின்னாலிருந்த புல் அடர்த்தியிலிருந்து வெளிப்பட்ட ரங்குடு, தன் இலக்கை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு விநாடி நிமிர்ந்து நின்றவன் மறுவினாடி குண்டனின் கால்களுக்கிடையே தாவி, அவனைத் தலை குப்புறத் தரையில் வீழ்த்தினான். திடீர்த் தாக்குதலுக்குள்ளான குண்டன் நிலை குலைந்து போய் – தரையில் மூக்கு மோதிய வேகத்தில் பொறி கலங்கிப் போனான்.

"ஓடுங்க... ஓடுங்க! அந்தத் தோப்புப் பக்கமா மரங்களுக்கிடையே புகுந்து ஓடுங்க!" என்று அவசரப்படுத்தியது ரங்குடுவின் குரல். நித்யாவும் சத்யாவும் மின்னல் வேகத்தில் சுவரிலிருந்து குதித்து, மரங்கள் மண்டிக் கிடக்கும் இருள் சூழ்ந்த கானகத்தை நோக்கி ஓடினார்கள்.

குப்புறக் கிடந்த குண்டனின் மேலிருந்து ஸ்பிரிங்கைப் போலத் துள்ளி எழுந்த ரங்குடு. இமைக்கும் நேரத்தில், அருகில் கிடந்த ஒரு காய்ந்த மரக் கட்டையை எடுத்து முனகிக் கொண்டு எழுவதற்கு முயலும் குண்டனின் தலையில் ஒரு போடு போட்டான் வலுவாக! 'ஆ' என்று அலறியபடி குண்டன் அசைவற்றுப் போகவே நித்யா சத்யா ஓடிய திசையில் தானும் ஓட முற்பட்டபோது–



ஒரு மஞ்சள் நிறக் கார் வேகமாக வந்து கிறீச்சிட்டு நின்றது. அதிலிருந்து ஜெயராஜ் மூன்று அடியாட்களுடன் இறங்கினான். சுற்று முற்றும் பார்த்த அவர்கள் நித்யாவும் சத்யாவும் ஓடுவதையும் அவர்களைத் தொடரும் ரங்குடுவையும் கவனித்தனர். குப்புற விழுந்து கிடக்கும் தங்கள் கூட்டாளியையும் பார்த்தார்கள்.

"சீக்கிரம்... சீக்கிரம் வேகமா ஓடுங்க ... என்னைத் திரும்பிப் பார்க்க வேணாம்" என்று கூறியபடியே அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தான் ரங்குடு.

"துரத்துங்க... தப்ப விடாதீங்க... பிடிங்க... ஓடுங்க...!" என்று உரக்கக் கட்டளையிட்டான் ஜெயராஜ். அவன் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து குண்டுகள் வானத்தை நோக்கிச் சீற, அப் பிரதேசத்தின் அமைதி குலைந்து கிடுகிடுக்க வைத்தது. பறவைகள் மரங்களிலிருந்து கிலியோடு கிறீச்சிட்டபடி பறந்தோடின.

(தொடரும்)



● என். ராஜி,
மேலப்பாடி.

? குழந்தைப் பருவத்தில் போடப்படும் தடுப்பு ஊசிகள் எத்தனை ஆண்டுகள் எதிர்ப்பு கொடுக்கும்?

! பொதுவாக, குழந்தைப் பருவத்தில் போடப் படுகின்ற தடுப்பு ஊசிகள் வாழ்நாள் முழுவதும் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கும். காரணம் என்னவென்றால், மேற்சொன்ன தடுப்பு ஊசிகள் தொடர்ந்து பணி செய்யும் பொருட்டுக் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஊக்குவிப்புத் தடுப்பு ஊசிகளையும் (Booster Doses) குழந்தைகளுக்குப் போடுவதுதான்.



● செ.மலர்விழி,
அன்சாரி நகர்.

? சொறி சிரங்கு, படை எப்படி வருகிறது, டாக்டர்? இவற்றைப் போக்க என்ன வழி?

! சொறி சிரங்கு என்பது சிரங்குப் பூச்சியால் வருகின்ற தொற்று நோய். சிரங்கு உள்ள நபருடன் நெருங்கிப் பழகும்போதும் அவர் உபயோகித்த துணி, படுக்கை, பாத்திரம் போன்றவற்றை மற்றவர்கள் பகிர்ந்து கொள்ளும் போதும் சொறி சிரங்கு பரவி விடுகிறது. விரல் இடுக்குகள், அக்குள், மணிக்கட்டின் முன்புறம், முழங்கை, முழங்கால், தொப்புள், பிட்டம், தொடையிடுக்குகள் போன்ற இடங்களில் சிரங்குக் கொப்புளங்கள் தோன்றும். மருத்துவரின் யோசனைப்படி பென்சைல், பென்சோபேட், பெர்மத்ரின் என்ற மருந்துகளில் ஒன்றை கழுத்து முதல் பாதம் வரை ஒரு இடம் விடாது பூச வேண்டும். மூன்று நாட்கள் தொடர்ந்து பூசிய பின் நான்காம் நாள் நன்கு குளித்து சுத்தமான உடை உடுத்த வேண்டும். ஏற்கெனவே உபயோகித்த உடைகள் மற்றும் படுக்கை விரிப்புகளை வெந்நீரில் அலசி வெயிலில் உலர வைக்க வேண்டும். வீட்டில் ஒருவருக்கு சிரங்கு வந்தால்கூட வீட்டில் உள்ள அனைவருமே இந்தச் சிகிச்சையைப் பெற்றால்தான், சிரங்கு மீண்டும் வந்து தொல்லை தராது. இனி, 'படை'க்கு வருவோம்.

கம்ப்யூட்டர் கண் பரிசோதனை என்றால் என்ன?

இது ஒரு காளான் நோய். பூஞ்சைக் காளான் கிருமிகள் தோலை பாதிக்கும்பொழுது 'காளான் படை' ஏற்படும். இதுவும் ஒரு தொற்று நோய்தான். படை நோய் உள்ளவரிடமிருந்து மற்றொருவருக்கு நெருங்கிய தொடர்பு மூலம் பரவுகிறது. இந்த நோயைப் போக்கப் பல்வேறு மருந்துகள் உள்ளன. கீடோகோனசோல் மற்றும் ஃப்ளுகோனசோல் மருந்துகள் அண்மையில் வந்துள்ளவை. இவற்றில் ஒன்றை படையுள்ள இடத்தில் தினமும் பூசினால் இரண்டு வாரங்களில் நோய் குணமாகும். சொறி சிரங்கு, படை இந்த இரண்டு நோய்களும் சுய சுத்தக் குறைவால் வருபவை. சுத்தம் காத்தால் இவற்றுக்கு இடமில்லை. சரிதானே மலர்விழி?

● மொஹமத் சாகிப், கிருஷ்ணகிரி.

? என் உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களில் அடிக்கடி வியர்க்கிறது. இதற்கு என்ன காரணம்? என்ன சிகிச்சை?

! இந்தக் கோளாறு பெரும்பாலும் அதிக உஷ்ண சூழ்நிலையாலும் மனப் பிரச்னைகளாலும் எளிதில் உணர்ச்சி வசப்படுவதாலும் பயம், பதற்றம் போன்றவற்றாலும் ஏற்படுகிறது. இதனைப் போக்க வியர்வை உண்டாகும்



இடத்தில் பூசிக் கொள்ளும் படியாக சில மருந்துகள் உள்ளன. அவற்றின் பெயர்களை இங்கு குறிப்பிடுவது உசிதமில்லை. ஆகவே மருத்துவரின் நேரடிப் பார்வையில் தொடர்ந்து பல மாதங்களுக்கு சிகிச்சை பெற்றால் குணம் கிடைக்கும்.

● **கே. சுதர்ஷன், தூத்துக்குடி.**
காழி. ஆர். சீதாராமன், சீர்காழி.

? சாப்பிட்ட உடனே மலம் கழிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுவது எதனால்? அதனைத் தீர்க்க வழி என்ன?



! அமீபியாசிஸ் அல்லது ஜியார்டியாசிஸ் நோய் குடலில் இருந்தால், சாப்பிட்டவுடன் மலம் கழிக்கத் தோன்றும். மலப் பரிசோதனை மூலம் இதனை உறுதி செய்து, மருத்துவர் ஆலோசனைப்படி தகுந்த அமீபாக்கொல்லி மருந்துகளையோ, ஜியார்டியாக் கொல்லி மருந்துகளையோ ஒரு வாரத்திற்கு உட்கொண்டால் உங்கள் பிரச்னை தீரும். மேலும், சாப்பிடும் முன்பும் மலம் கழித்தவுடனும் கைகளை சோப்புப் போட்டு சுத்தமாகக் கழுவும் பழக்கத்தைக் கடைப் பிடித்தால் இந்தப் பிரச்னை திரும்பவும் ஏற்படாது. காரம் நிறைந்த உணவுகளையும் அசைவ உணவுகளையும் குறைத்துக் கொள்வது நல்லது. கொழுப்பு மற்றும் எண்ணெய் நிறைந்த உணவுகளும் குறைக்கப்பட வேண்டும்.



● **கே. பிரஷ்னேவ், பாக்கம் கோட்டூர்.**


? வயிற்றுப் புண்ணுக்கும் வாய்ப் புண்ணுக்கும் தொடர்பு உண்டா டாக்டர்? இவற்றுக்கு என்ன சிகிச்சை செய்தால் குணமாகும்?

! தொடர்பு உண்டு, பிரஷ்னேவ். வயிற்றில் அமிலச் சுரப்பு அதிகரிக்கும்போது வயிற்றில் புண் ஏற்படுகிறது. இந்த அமிலமானது ஏப்பம், எதுக்களிப்பு மூலம் அடிக்கடி வாய்க்குப் பயணம் செய்யும்போது, வாய்ப்புண் ஏற்படுகிறது. இவற்றை சரி செய்ய வயிற்றுப்புண் மருந்துகளைச் சுமார் ஒரு மாத காலத்திற்கு தொடர்ந்து உட் கொள்ள வேண்டும்; அத்தோடு வைட்டமின் மாத்திரைகளையும் சாப்பிட வேண்டும். தவிர கார உணவுகளைத் தவிர்த்து பால், மோர், தயிர் போன்ற குளிர்ச்சியான உணவுகளை நிறைய சேர்த்துக் கொள்ள வேண்டும். பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகளையும் அடிக்கடி சேர்த்துக் கொண்டால் வயிற்றுப் புண்ணும் வராது; வாய்ப்புண்ணும் வராது.


● **கமலி கோமதி நாயகம், திருநெல்வேலி.**

? கம்ப்யூட்டர் கண் பரிசோதனை என்று போர்டு பார்த்தேன். அப்படியென்றால் என்ன, டாக்டர்?

! கண்ணில் ஏற்படுகின்ற பார்வைக் கோளாறைக் (Refractive Error) கம்ப்யூட்டர் மூலம் கணிப்பது 'கம்ப்யூட்டர் கண் பரிசோதனை' என்று அழைக்கப்படுகிறது. இதில் பார்வைக் கோளாறைக் கண்டுபிடிக்க, 'Auto Refractor' என்ற சிறு கருவி உபயோகிக்கப்படுகிறது. இந்தப் பரிசோதனையில் தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. ஆகையால், கண் மருத்துவரின் பரிசோதனைப்படி பார்வைக் கோளாறைக் கணித்து சிகிச்சை செய்வதே சிறந்த முறை.



டாக்டர் கு. கணேசன்


1
2
3
4
5
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30

புதையலைத் தேடி...



ஆழ்கடலில் இருக்கும் புதையலை ஒவ்வொரு குமிழியாய் கடந்து யார் முதலில் கைப்பற்றுகிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

பகடையைப் பயன்படுத்தி விளையாட வேண்டும். இரண்டு முதல் நான்கு பேர் வரை விளையாடலாம். ஒவ்வொருவரும் வெவ்வேறு வண்ணப் பொத்தான்களைப் பயன்படுத்த வேண்டும்.








விதிமுறை :

எண் - 4 மீன் நண்பனின் உதவியால் 8-ஆம் எண்ணுக்குச் செல்லவும்.

எண் - 6 - நீர்க்குமிழி உடைந்து விட்டதால் தொடர்ந்து செல்ல முடியாது. எனவே எண் 3-க்குத் திரும்பவும்.

எண் - 9 - சுறாமீனின் பிடியில் சிக்கி விட்டீர்கள். 3 போட்டால் மட்டுமே ஆட்டம் தொடரலாம்.



எண் 12 - நத்தையாரின் முதுகில் ஏறி எண் 16க்குச் செல்லவும்.

எண் 13 - பாம்பு கடித்ததால் சிகிச்சைக்கு 5-ஆம் எண்ணுக்குச் செல்லவும்.

எண் 17 - கடல் புழு உங்கள் பயணத்தைத் தடைசெய்கிறது. எனவே 11க்குச் செல்லவும்.

எண் 19 - டால்பினின் உதவியால் எண் 23-க்குச் செல்லவும்.


எண் 22 - உதவும் எண்ணத்துடன் வந்த மீனார் வழியை மறந்ததால் மீண்டும் வந்த வழியே திரும்பிச் செல்ல நேரிடுகிறது. மீண்டும் 10-ஆம் எண்ணிலிருந்து ஆட்டத்தைத் துவக்குங்கள்.

எண் 25 - தவளையாரின் மேல் ஏறி 28க்குத் தாவிச் செல்லவும்.


எண் 27 - புதையலை எடுத்துச் செல்ல பை கொண்டு வராததால் ஆமையாரின் உதவியுடன் 21க்குச் சென்று எடுத்து வரவும்.

எண் 29 - முதலை குறுக்கே வந்து விடுகிறது. மீண்டும் எண் 23-க்குச் செல்லவும்.





படம், தொகுப்பு :
தமிழ்



கோகுலத்துக்கு சந்தா செலுத்திவிட்டீர்களா?

வினித் கோகுலத்தின் வாசகன். ஏற்கனவே சந்தா செலுத்தி விட்டான். பிறகு எதற்கு இப்படி பறக்கிறான்? அவன் நண்பன் சதீஷ் பிறந்த நாளுக்கு கோகுலம் அன்பளிப்பாகத் தருவதற்காகத்தான்! இவர்களைப் போல் உங்களுக்கும் கோகுலத்தைப் படிக்க ஆர்வம் இருக்கும். நீங்களும் சந்தா செலுத்தலாமே! அல்லது நீங்கள் ஏற்கனவே சந்தாதாரராக இருந்தால் உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா செலுத்தலாமே!

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

கோகுலம் க்விஸ் முடிவு

நிறைய பேர் ஆர்வத்துடன் போட்டியில் பங்கேற்றாலும் பத்து பேரே சரியான விடைகளை அளித் துள்ளனர்.

ரூபாய் இருபது பரிசு பெறுவோர் :

1. ஆர். வெஸ்லி, இரேனிபுரம், குமரி மாவட்டம்.
2. ஆர். சம்பத்குமார், கோவை.
3. க. இலக்கிய அரசு, ஒன்பதாம் வகுப்பு, ராயன்பாளையம், காரைக்கால்.
4. எஸ். பவித்ரா, புதூர், திருச்சி.
5. சோ. இ. தாமோதரன், பதினோராம் வகுப்பு, செய்யார்.
6. பி. ராஜீவ்காந்தி, போலகம், நாகை மாவட்டம்.
7. அ. ஹாரூன் ரசித், நாகமலை, மதுரை மாவட்டம்.
8. அ. பிரசன்னா, ஐந்தாம் வகுப்பு, உடுமலைப்பேட்டை.
9. செ. கார்த்திக் ராஜ், கோவை.
10. வி.பி. ராகவேந்திரன், புதூர், திருச்சி.

சரியான விடை :


1. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.
2. மனித உடலில் 206 எலும்புகள் உள்ளன.
3. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள குகைக் கோயில்களின் பெயர் அஜந்தா, எல்லோரா.
4. நோபல் பரிசை இருமுறை பெற்ற பெண்மணி மேரிகியூரி.
5. தலையைத் தூக்காமல் நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.
6. சமீபத்தில் நடந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் அதிக ரன்களைக் குவித்தவர் ராகுல் திராவிட்.
7. சிவப்பு கிரகம் என்று அழைக்கப் படும் கோள் செவ்வாய்.
8. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு வர கடல் வழியைக் கண்டுபிடித்தவர் வாஸ்கோடகாமா.
9. வடஅமெரிக்காவில் உள்ள மிகப் பெரிய நன்னீர் ஏரி லேக்சுப்பீரியர்.
10. தமிழ்நாட்டில் உப்பு சத்தியாகிரகம் நடந்த இடம் வேதாரண்யம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

ஓவியப் போட்டி

சிலுசிலு காற்றையும் பாய்ந்து வரும் அலையையும் கடற்கரை களில் கண்டு ரசித்திருப்பீர்கள். கடல், கடற் கரைக் காட்சிகளை வண்ணப்படங் களாக வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண் டாவது, மூன்றாவது பரிசுகளும் மற்றும் ஆறுதல் பரிசுகள் இரண்டும் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடி வானது. உங்கள் முகவரியை அவசி யம் குறிப்பிட வேண்டும். கடைசி தேதி : 20.10.99





லட்டு

கிட்டுவுக்குத் தீரவில்லை
லட்டு மேலே ஆசை
எட்டு லட்டு தின்றபின்பு
தொப்பையிலே ஓசை.

அய்யம்பேட்டை அத்தை நேற்று
வாங்கி வந்த லட்டு
பையன் வெளுத்து வாங்கியதால்
போச்சு வயிறு கெட்டு.

படுக்க முடிய வில்லை;
படிக்க முடிய வில்லை;
இடுப்புக்கு மேல் வலிமிகுந்து
இருப்புக் கொள்ள வில்லை.

டாக்டர் ஊசி போட்டார்
தக்க மருந்து தந்தார்
விக்கெட் விழுந்த பாட்ஸ்மன் போல
வீடு வந்தான் கிட்டு.




செய்த ரகளை!

லட்டு செய்த லீலை
லேசில் தீரவில்லை
எட்டு நாட்கள் பட்டினியால்
சுருங்கிப் போச்சு தொப்பை.

அடுத்த முறை அத்தை
வாங்கி வந்த லட்டை
விருப்பமுடன் பார்த்த கிட்டு
விழுங்க மட்டும் இல்லை!

— ஜிண்டு



சிறந்த பரிசு!

ஜமதக்னி

அந்த மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மந்திரமூர்த்தி. அப்பள்ளி மாணவர்களைத் தம் அன்பால் பிணைத்திருப்பவர். பண்புக்கு உதாரணமாய் திகழ்பவர்.

மாணவர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருக்கும்போது கூட, 'மந்திரம் சார்' பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார்கள். தினமும் வகுப்பு நேரம் முடிந்ததும் சில மாணவர்கள் மந்திரம் ஸார் அறையை முற்றுகையிடுவார்கள். மந்திரமூர்த்தியும் மாணவர்களுடன் பேசிக் கொண்டிருப்பார். அவருடன் பேசி முடித்தவுடன் மாணவர்களுக்கு ஏதோ நூலகத்திற்குப் போய் வந்தது போன்ற பிரமிப்பு ஏற்படும். அவ்வளவு தகவல்களைச் சொல்லுவார். 'வௌவால் முட்டை இடுமா?', 'கூடு கட்டத் தெரியாத பறவை எது?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டுப் பின்னர் அதற்குரிய பதிலையும் விரிவாகக் கூறுவார். இது மட்டுமில்லை; சுமாராக மதிப்பெண்கள் வாங்கும் மாணவர்களுக்கு அன்புடன் பாடம் சொல்லித் தருவார். அப்படிப்பட்ட மந்திரம் சார் அடுத்த வாரம் ஓய்வு பெறுகிறார். சும்மா யிருப்பார்களா மாணவர்கள்?

பசுபதி, சுரேஷ், வெங்கட் மூவரும் மந்திரமூர்த்தி சாரின் ஓய்வு பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

"நம்ம சாருக்கு பாரதியார் கவிதைகள் வாங்கித் தரலாமா?" - பசுபதி கேட்டான்.

"சார் புத்தகம் ஏராளமாய் வைத்திருக்கிறார். நான் என் அப்பாவிடம் சொல்லி வேறு ஏதாவது விலையுயர்ந்த பொருளாய் வாங்குவேன்" - பணக்காரப் பையன் சுரேஷ் கூறினான். அவர்களின் சர்ச்சையில் கலந்து கொள்ளாமல் அவர்கள் கூறுவதை மட்டும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் வெங்கட்.

"நீ என்ன வாங்கித் தரப் போகிறாய்?" - மற்ற இருவரும் அவனைக் கேட்டனர்.

"நேற்று நம்ம சார் சொன்னதை நீங்கள் மறந்து விட்டீர்கள் போல இருக்கே? 'எனக்கு உங்கள் அன்பு போதும். வேறு அன்பளிப்பு வேண்டாம்' என்று கூறவில்லையா?"

"அவர் அப்படித்தான் சொல்லுவார். அதைப் போய் பெரிசா எடுத்துக் கொள்ளக் கூடாது" - பசுபதி.

"தவறு. நான் அவர் வார்த்தைக்கு மிகுந்த மதிப்பு கொடுப்பவன்" - வெங்கட்.

"பணம் செலவழிக்க மனமில்லை. அதை வெளிப்படையாச் சொல்லிடேன்" - சுரேஷ் கேலியாகச் சிரித்தான்.

"கஞ்சத்தனத்தைக் கூட எவ்வளவு நாசூக்காக, உயர்வாகச் சொல்லிக் கொள்கிறான்" என்று பசுபதி கிண்டலடித்தான். வெங்கட் பதில் கூறவில்லை; மற்றவர்கள் கேலியைப் பற்றியும் கவலைப்படவில்லை.

மந்திரமூர்த்தியின் ஓய்வு பெறும் நாள் வந்தது. மாணவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வாழ்த்துச் சொன்னார்கள்; பரிசுப் பொருட்கள் கொடுத்தார்கள். அன்று மாலை வழக்கம் போல அவர் அறையில் குழுமினார்கள்.

"கூடு கட்டத் தெரியாத பறவை..."

என்று மந்திரமூர்த்தி சார் ஆரம்பிக்கும் பொழுதே மாணவர்கள், "குயில்" எனக் கூவினர். "காக்கையின் கூட்டில் முட்டையைப் போடும் பறவை குயில் என்று நீங்க தானே சார் சொல்லியிருக்கீங்க" என்று மாணவர்கள் சொன்னதும் மந்திரமூர்த்தி சிரித்தார்.


"உங்களுக்குத் தெரியாத சமஸ்கிருதக் கவிதை ஒன்று சொல்கிறேன். குயில் காகத்தின் கூட்டில் முட்டையிடும். அப்பாவி காகம் எல்லாக் குஞ்சுகளும் தனது என நினைக்கும். ஆனால் வசந்த காலம் வந்ததும் குயில்கள் பறந்தோடும். அது போல...'' என்று சொல்லிப் புன்னகை செய்தார்.

மாணவர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தனர். "நான் உங்கள் அனைவரையும் என் சொல்படி கேட்டு நடக்கும் மாணவர்கள் என்று நினைத்திருந்தேன். இன்றுதான் தெரிகிறது ஒரே ஒரு மாணவனைத் தவிர மற்ற யாரும் நான் கூறுவதைக் கடைப்பிடிப்பதில்லை என அறிந்து கொண்டேன். உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டுமானால் நான் கூறும் நல்ல பண்புகளைக் கடைபிடித்தாலே போதும்."

தலைமை ஆசிரியர் பேசுவதை நிறுத்தினார். அவர் மேலே என்ன கூறப் போகிறார் என்று மாணவர்கள் ஆர்வத்துடன் அவரைக் கவனித்தனர். தலைமையாசிரியர் தொடர்ந்தார். "எனக்குக் கிடைத்த பரிசுகளில் சிறந்த பரிசு வெங்கட் கொடுத்தது தான்" மாணவர்களுக்குத் திகைப்பு. அவன் தான் ஒன்றுமே கொடுக்கவில்லையே என்று.

''ஆதரவற்றவர்களுக்கு அவனால் முடிந்த உதவிகள் செய்யப் போவதாக வெங்கட் என்னிடம் கூறினான். அதைத் தான் நான் சிறப்புப் பரிசாக ஏற்கிறேன்" என்றார். கூட்டம் அமைதி காத்தது. பின், "சார் நாங்களும் வெங்கட் போல நல்ல பழக்கம் ஒன்றை இன்று முதல் ஆரம்பித்துத் தொடர்ந்து கடைப்பிடிக்க உள்ளோம்" என்றார்கள் கோரஸாக.

அந்தப் பரிசை மகிழ்ச்சியுடன் புன்னகை புரிந்து ஏற்றுக் கொண்டார் தலைமையாசிரியர்.



கண்கவர் வண்ணங்களில் நம்மை மயக்கும் பறவைகளில் Hoopoe என்று அழைக்கப்படும் கொண்டலாத்தியும் ஒன்று.

ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் வாழும் இவை இளவேனிற் காலத்தில் தென் ஐரோப்பாவை நோக்கிச் செல்கின்றன.





விசிறிக் கொண்டைப் பறவை

இவை தனியாகவோ அல்லது தன் துணை யுடனோ மட்டுமே வசிக்க விரும்புகின்றன. கூட்டமாக வசிப்பதில்லை. எனவே மற்ற பறவைகள் ஐரோப்பாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் போது அவற்றுடன் சேர்ந்து இவையும் செல்கின்றன.


மரங்கள் அடர்ந்த பகுதிகளையே தனது வாழிடமாகத் தேர்ந்தெடுக்கிறது கொண்டலாத்தி. எனினும் புல்வெளிகள் மற்றும் பூங்காக்களிலும் இவற்றை நம்மால் பார்க்க முடியும்.

மரப்பொந்துகள், பாறை மற்றும் சுவர் இடுக்கு களில் சிரத்தையின்றி கூடுகளைக் கட்டும். இக்கூட்டைச் சுற்றிலும் அருவருக் கக்கூடிய கெட்ட நீரைப் பீச்சிய டிக்கும். இதனால் மற்ற பறவைகளோ, எதிரிகளோ





எஸ். சுஜாதா



வெள்ளை, கறுப்பு நிறங்களில் காணப் படும். இறக்கை யிலும் வாலிலும் கறுப்பு நிறத்தில் வெள்ளை நிறப் பட்டைகள் பறக் கும் போது பார்ப் பதற்கு அழகாக இருக்கும்.

கூட்டுக்குள் வர நினைக்காது.

கூட்டில் ஏப்ரல், மே மாதங்களில் தாய் கொண்டலாத்தி 4 முதல் 7 முட் டைகள் வரை இடும். பதினாறு நாட்கள் வரை முட்டையின் மீது அமர்ந்து தாய் அடைகாக்கும். முட்டையிலிருந்து குஞ்சு கள் வெளிவந்ததும் தாய்க்கும் குஞ்சுகளுக் கும் உணவு கொண்டு வந்து கொடுத்து கவனித்துக் கொள்ளும் ஆண் பறவை. ஒரு மணி நேரத்திற்கு மூன்று முறை உணவு கொண்டு வந்து கொடுத்து, கவனிக்கும் அப்பாவின் கரிசனத்தைப் பாருங்கள். குஞ்சுகள் பிறந்த 27 நாட்களில் தனியாக வசிக்கத் தொடங்கி விடுகின்றன.

பொதுவாக ஆண் பறவைகள் எல்லாம் பெண் பறவைகளைக் கவர்வதற்காக கண்கவர் வண்ணங்களைப் பெற்றிருக்கின் றன. மயில்களில் கூட ஆண் மயிலுக்குத் தோகை உண்டு. பெண் மயிலுக்குத் தோகை கிடையாது. ஆனால் கொண்ட லாத்திகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் விரித்து மடக்கக்கூடிய அழகிய கொண்டை உண்டு.

கிளர்ந்தெழும் போதும் உட்காரும் போதும் எச்சரிக்கை கொள்ளும் போதும் இந்தக் கொண்டை விசிறி போல் விரியும். மற்ற நேரங்களில் மடிந்து கொள்ளும்.

இவற்றின் உடல் பழுப்பு, பிரௌன்

கோழிகளைப் போலவே கொண் டலாத்தியும் இரை தேடி மண்ணைக் கிளறும். அலகு நீண்டு சற்று வளைந்து இருக்கும். இதால் மரப் பட்டைகள், பாறை விரிசல்கள், நிலத்திலும் சுலபமாக இரையைப் பிடிக் கும்.

புழு, பூச்சி, நத்தை, வண்டுகளே முக்கிய மான உணவு. சில சமயங்களில் சிலந்தி களையும் பிடித்துச் சாப்பிடுவது உண்டு. எனினும் கொழுத்த புழுக்கள் என்றால் இவற்றிற்கு விருப்பம் அதிகம்.

கொண்டலாத்தி இறக்கைகளை மேலும் கீழும் அசைத்து மிக வேகமாகப் பறக்கும். அப்போது மிகப் பெரிய வண்ணத்துப் பூச்சி பறப்பது போல் தோற்றம் அளிக்கும். மிகச் சாமர்த்தியமாகவும் வேகமாகவும் பறப்பதால் பருந்து, இராஜாளி போன்ற எதிரிகளிடமிருந்து சுலபமாகத் தப்பி விடுகின்றன.

பயிர்களை நாசம் செய்யும் புழு, பூச்சி களைப் பிடித்து உண்ணுவதால் இப் பறவை விவசாயிகளின் நண்பனாகக் கருதப்படுகிறது. இரை தேடி மண்ணைத் தோண்டுவதாலும் கூட்டில் கெட்ட வாடை வீசுவதாலும் சிலர் கொண்ட லாத்தியை விரும்புவதில்லை.

'ஊபு-ஊபு-ஊபு' என கொண்டலாத்தி குரல்கொடுக்கும்.

புறா அளவு சிறியதாக இருக்கும். கொண்டலாத்தியின் விலங்கியல் பெயர் UPUPA EPOPS. குடும்பம் UPUPIDATE.

மாடு வரையுங்கள்!


கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் மாடு கிடைத்து விடும்.

உடல் மற்றும் மூன்று கால்கள்: F14→E16→F17→H17→ G18→G21→H21→H18→I17→Q17→Q21→R21→ R17→S17→S21→T21→ T17→U16→U10→T11→ R11→Q10→Q11→G11→F12→D16→ F18→G18

முகம்: Q11→Q12→R13→Q14→R15→T15→U14→T13→U12

காதுகள் மற்றும் கொம்புகள் :Q11→O10→O9→P9→Q10→P8→Q7 →R7→Q8→R9→T9→U8→T7→U7→V8→U10→W10→V11→U11


நான்காவது கால் மற்றும் பால்மடி: H18→I18→I21→J21→J18→K18→ K19→L19→L18→M17



நன்றி: லிட்டில் ஆர்க்



11
சிந்துபாத்தின் சாகசப் பயணங்கள்!
அமைப்பு : விஜி
படம் : லலிதா
சிந்துபாத் நான்காவது பயணத்தை ஆரம்பித்தான். கப்பலில் –
சிந்துபாத் உங்களுக்கு இது முதல் பயணமா?
இல்லை. நான்காவது பயணம்.
அப்படியா! ஒவ்வொரு பயணமும் சுவாரசியமாக இருந்திருக்குமே!
எல்லாம் திகில் நிறைந்த பயணங்கள். இந்தப் பயணமாவது ஆபத்தில்லாமல் இருக்குமென நினைக்கிறேன்.
இரண்டு நாட்கள் கழித்து –
பயணிகளே ஆபத்து! கப்பலில் ஓட்டை விழுந்து தண்ணீர் புகுந்து விட்டது.
வாங்க. ஓட்டையைச் சரிசெய்ய முடியுமான்னு பார்க்கலாம்.


ஒண்ணும் செய்ய முடியாது. கப்பல் மூழ்குவதற்குள் தப்பிக்கும் வழியைப் பார்க்க வேண்டும்.
சரக்குகளை என்ன செய்வது?
சரக்கு முக்கியமில்லை. உயிர்தான் முக்கியம். இந்தக் காலி பீப்பாய்களை பிடித்து நீந்த ஆரம்பிக்கலாம்!
நீந்த ஆரம்பித்தனர்.
பலர் நீந்த முடியாமல் மூழ்கினர்.
நீண்ட பயணத்திற்குப் பின் ஒரு தீவை அடைந்தனர்.


ஐயோ! நீந்தி, நீந்தி ரொம்ப சோர்ந்து போயிட்டேன்.
சிந்துபாத் என்னால் அசையக் கூட முடியலை.
கொஞ்ச நேரம் இப்படியே கிடக்கலாம்.
சிந்துபாத், ஏதோ பயங்கர சத்தம் கேட்கிறதே!
ஐய்யய்யோ, ஒற்றைக் கண் அரக்கர்கள்!
இப்ப ஒண்ணும் பண்ண முடியாது!
பயணிகளை இழுத்துச் சென்று ஒரு வீட்டில் அடைத்தனர். அங்கு ஏற்கெனவே ஒருவன் இருந்தான்.
இத்தனை பேரும் இங்கு எப்படி வந்தீர்கள்?
கப்பலில் ஓட்டை விழுந்து மூழ்கி விட்டது. நீந்திக் கரை சேரும் போது இங்கு வந்தோம்.



நீங்கள் எப்படி இங்கே?
நானும் நண்பர்களும் வழி தவறி இத்தீவுக்கு வந்தோம்.
மற்றவர்கள் எங்கே?
இந்த ஒற்றைக் கண் அரக்கர்கள் மனித மாமிசம் சாப்பிடுபவர்கள்.
ஐயோ மற்றவர்களைச் சாப்பிட்டு விட்டார்களா?
ஆமாம்! அவர்கள் சாப்பிடும் வரை நமக்கு நல்ல தீனி கொடுப்பார்கள்.
தப்பிக்க வழி எதுவும் கிடையாதா?
பக்கத்தில் மிளகுத் தீவு இருக்கிறது. அங்கு வியாபாரிகள் வருவார்கள். ஆனால் இங்கிருந்து தப்பிக்க முடியாது.
நாட்கள் சென்றன. ஒருநாள் – (தொடரும்)

ஓவியப் போட்டி முடிவுகள்

முதல் பரிசு




எஸ். ரேகா, நாகர்கோவில்.

இரண்டாம் பரிசு



ஆர். விமலா, புதூர், திருச்சி.

மூன்றாம் பரிசு



கே. ஜெயக்குமார், செட்டிகளம், ஈரோடு மாவட்டம்

ஆறுதல் பரிசு



எம். கோகிலவாணி,
எட்டாம் வகுப்பு, அருப்புக் கோட்டை

ஆறுதல் பரிசு



ப. லோகக் கண்ணன்,
மூன்றாம் வகுப்பு, சிங்கப்பூர்.

ஆகஸ்ட் இதழில் 'மீன்கள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள்.



பொன் வேண்டாம்!

சுல்தான் கஜினி முகம்மது பண்டிதர்கள், ஞானிகள், தத்துவ மேதைகள் அனைவரையும் மதித்து கௌரவிப்பவர்.

அவர் காலத்தில் வாழ்ந்த பிரபல தத்துவஞானி, ஷேக் அபூல் ஹஸ்ஸன் புர்க்கான் என்பவர். எப்போதும் அல்லா தியானத்திலேயே மூழ்கிக் கிடப்பார். இடைவேளைகளில் எது கிடைக்கிறதோ, அது காய்ந்த ரொட்டித் துண்டாக இருந்தாலும் உண்டு மகிழ்வார். உல்லாச வாழ்க்கையை ஒரு போதும் விரும்பியதில்லை அவர்.

ஒரு சமயம் அபூல் ஹஸ்ஸனைக் காணச் சென்றார் கஜினி முகம்மது. ஒரு பை நிறைய தங்க நாணயங்களை அவருக்குக் காணிக்கையாக வைத்தார். அதற்குப் பதிலாகத் தன்னிடமிருந்த காய்ந்து போன ஒரு ரொட்டித் துண்டை சுல்தானிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்.

அதை வாங்கிக் கொண்ட கஜினி சுல்தான் அருவருப்படைந்து தின்னத் தயங்கினார். அதைக் கண்ட அபூல் ஹஸ்ஸன் கூறினார்:

"இந்த ரொட்டித் துண்டு உங்கள் வாய்க்குள் எப்படி செல்லவில்லையோ அதே போல் தாங்கள் தந்த தங்கமும் என்னுள்ளே செல்லாது. அதைத் திரும்ப எடுத்துச் சென்று விடுங்கள்'' என்றார்.


கஜினி முகம்மது திகைத்து நின்றார். 'நமக்கு எவ்வளவு செல்வம் இருக்கிறது! இவருக்கோ ஒன்றுமே இல்லை. எவ்வளவு பொன்னைக் காணிக்கையாகக் கொடுத்தோம்! பதிலுக்கு ரொட்டித் துண்டைக் கொடுத்தபோது நம்மால் தின்ன முடியவில்லை! அந்தக்ஷணம் நான் எவ்வளவு பெரிய சுல்தான்என்ற அகந்தை கொண்டிருந்தேன். யாருக்கும் கொடுக்காத மிக அதிகமான அளவு பொன்னைக் கொடுத்தும் நிராகரித்து விட்டாரே என்ற ஆங்காரம் வேறு தலை தூக்கியது. அது இப்போது போய்விட்டது!' என்று மனம் திருந்தி எதுவும் பேசாமல் எழுந்தார்.

அப்போது அபூல் ஹஸ்ஸன் எழுந்து வந்து கஜினியை சற்று நிற்கச் சொன்னார்.

'நாம் இங்கு வந்தபோது, அவ்வளவு தங்கத்தையும் கொடுத்தபோது எழுந்திருக்காமல் கீழே வைக்கச் சொன்னவர், இப்போது தம்மை வழி யனுப்ப எழுந்து வாயில் வரை வந்திருக் கிறாரே!' என்று ஆச்சரியமடைந்து அதன் காரணத்தை வினவினார்.

"நீங்கள் இங்கே வந்தபோது கையில் தங்கத்தின் கனம் இருந்தது. அதனால் தாங்கள் சிரசில் அகங்காரம் என்ற மண்டை கர்வம் இருந்தது. நடந்த நிகழ்ச்சியினால் இப்போது அது கீழே இறங்கி விட்டது. அதனால்தான் எழுந்து வந்தேன். அகங்காரம், கோபம், மண்டை கனம் இவற்றிற்கெல்லாம் நான் அடிபணிபவன் அல்ல. அன்பு, தர்மம் இவைகளுக்கே அடிபணிபவன்'' என்று கூறி சுல்தானை வழியனுப்பி வைத்தார்.

- ஏழ்வரைக்கடியான்



"எனக்கு இருமல் வந்தால் டாக்டர் கிட்ட போவேன். நீ?"

"இருமுவேன்!"

- தாரமங்கலம் மகேஷ்



"என்னங்க அவர் ஒரு குச்சியைப் பிடிச்சுக்கிட்டு ஆடறார்!"

"நான்தான் சொன்னேனே அவர் ஒரு 'குச்சிபிடி' டான்சர்னு"

- டி. அனந்தராமன்

"ஜேம்ஸ்பாண்ட் 007-ன் தம்பி பேர் எனக்குத் தெரியும்."

"அப்படியா! என்ன பெயர்?"

"006"

- தாரமங்கலம் மகேஷ்



"அவர் விரலாலே ஆணியை அடிப்பாரா எப்படி?"

"அவருக்குத்தான் நகச்'சுத்தி' இருக்கே!"

- கே.ஆர். உதயகுமார்



"நம்ம ஊரிலே யாரோ ஒருத்தர் முதலைப் பண்ணை வெச்சு நடத்தப் போறாராமே யார் அவர்?"

"யாரோ ஒரு பண'முதலை'யாம்!"

- வீ.எஸ். கணேசன்

கடி ஜோக்ஸ்!



அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெறும் ஆறாவது கதை.

முனிவரின் கர்வம்!



வெகு காலத்திற்கு முன் ஒரு காட்டில் சோமன் என்னும் முனிவர் தவம் செய்து வந்தார். அவருக்குப் பணிவிடை செய்ய சுபாகு என்ற ஒரு சீடன் இருந்தான். முனிவருக்குத் தன்னை விட பக்தியிலும் அறிவிலும் சிறந்தவர் யாருமே இல்லை என்ற கர்வம் எப்போதும் உண்டு. அதைக் கண்ட சீடனுக்குத் 'தனது குரு எல்லா விதத்திலும் சிறந்தவர். ஆனால் அந்தக் கர்வம் மட்டும் இல்லையெனில் அவரை விட சிறந்தவர் யாரும் இருக்க முடியாது' என நினைத்தான்.

ஒரு நாள் முனிவரின் உணவிற்கு ஏற்பாடு செய்ய அருகில் உள்ள சிறிய ஊரான அழகாபுரிக்குச் சென்றான். அப்போது அவ்வூர் மக்கள் அனைவரும் மருதநாயகம் என்ற செல்வந்தரைப் பற்றி புகழ்ந்து பேசினர்.

சீடன் ஒரு பெரியவரிடம் சென்று ''ஐயா, பெரியவரே இவ்வூர் மக்கள் அனைவரும் மருதநாயகம் என்பவரைப் பற்றி மிகவும் பெருமை பேசுகின்றனரே, அது உண்மையா?'' எனக் கேட்டான்.

அதற்கு அந்தப் பெரியவர் "நீ கேள்விப்பட்டது உண்மைதான்! அவர் தான தருமங்களிலும், அறிவிலும் சிறந்தவர்" என்று கூறினார்.

மேலும் சில விவரங்களைச் சேகரித்துக் கொண்டு சீடன் குருவிடம் திரும்பினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும் "குருவே இன்று நாம் இருவரும் அழகாபுரியிலுள்ள செல்வந்தர் மருதநாயகம் வீட்டில் விருந்து சாப்பிட ஏற்பாடு செய்திருக்கிறேன். அவர் இறை பக்தியிலும் தான தருமத்திலும் மிகவும் பற்றுள்ளவர் என அவ்வூர் மக்களின் மூலம் அறிந்தேன். அவரை நீங்கள் அவசியம் சந்திக்க வேண்டும் என்பது இந்தச் சீடனின் பணிவான விருப்பம்'' எனக் கூறினான்.

''சுபாகு உன் விருப்பம் அதுவெனில் அப்படியே ஆகட்டும்'' என்றார் முனிவர்.

இருவரும் செல்வந்தர் வீட்டை அடைந்தனர். மருதநாயகம் முறைப்படி உபசரித்து ஆசனத்தில் அமரச் செய்தார். பிறகு முனிவர் மருதநாயகத்திடம் "நீ பெரிய செல்வந்தர் எனக் கூறினார்களே, எவ்வளவு பணம் உள்ளது உன்னிடம்?'' எனக் கேட்டார்.

மருதநாயகம் பணிவுடன் "என்னிடம்

ஜெ. ராமகிருஷ்ணன்



ஒரு லட்சம் மட்டுமே உள்ளது" எனக் கூறினார்.

"பல லட்சக்கணக்கில் பணம் உள்ள போது வெறும் ஒரு லட்சம் மட்டுமே உள்ளது என பொய்யுரைத்ததால் நான் உன் வீட்டில் உணவு உண்ண மாட்டேன்" எனக் கூறினார் முனிவர்.

அதற்கு மருதநாயகம் "கோபம் வேண்டாம் முனிவரே, என்னிடம் பல லட்சக் கணக்கில் பணம் இருந்தாலும் நான் தான தருமங்கள் செய்தது ஒரு லட்சம் மட்டுமே. அதுவே நாளை நான் மரணமடையும் போது என் கூட வரும். அதனால்தான் அப்படிச் சொன்னேன். ஒருவன் இறந்தவுடன் அவனுடன் வருவது அவன் செய்யும் தருமம் மட்டுமேயல்லவா! முனிவரே தங்களுக்குத் தெரியாததா?" என்றார்.

முனிவரோ அசந்து விட்டார். பிறகு "சரி, சரி உனக்கு எத்தனைப் பிள்ளைகள்?" என வினவினார்.

"சுவாமி, எனக்கு ஒரே ஒரு மகன் மட்டுமே உண்டு" என்றார்.

"என்ன, மீண்டும் பொய்யுரைக்கிறாயா? நான் உன் வீட்டில் உணவு உண்ண மாட்டேன்" எனக் கூறினார் முனிவர்.

"நான் எப்போதும் பொய்யுரைப்பதில்லை சுவாமி. நான் இப்போதே உங்களுக்கு அதை நிரூபித்துக் காட்டுகிறேன்."

"சுவாமிநாதா இங்கு வா, முனிவரிடம் வந்து ஆசி பெற்றுக் கொள்" என்றார் மருதநாயகம்.

"அப்பா உங்களுக்கு வேலையில்லை, விளையாட்டை விட்டுட்டு நான் வர மாட்டேன்" என்றான்.

அடுத்தபடி, "மகனே மாதவா இங்கு வா, சுவாமிகள் வந்திருக்கிறார். அவரிடம் ஆசிபெற்றால் புண்ணியம்" என்றார்.

"அந்தப் புண்ணியத்தை நீயே பெற்றுக் கொள், நான் வரவில்லை" எனக் கூறினான் அடுத்த மகன்.

கடைசியாக "கதிரேசா இங்கு வா" என அழைக்க, "அப்பா இதோ வருகிறேன்" என்றபடி ஒரு பதினாறு வயது பாலகன் அடக்கத்துடன் வந்து தந்தையிடமும் முனிவரிடமும் தலை வணங்கி ஆசி பெற்றுச் சென்றான்.

"ஒருவனுக்கு எத்தனை மகன்கள் இருந்தாலும் தந்தை வழி அனுசரித்து நடப்பவனே உண்மையான மகன் ஆவான். அந்த தத்துவத்தின்படியே மூன்று பிள்ளைகள் இருந்தாலும் என் சொல்படி நடக்கும் கதிரேசன் மட்டுமே எனது மகன் என்ற கருத்தில் கூறினேன். தங்களிடம் பொய்யுரைக்கும் எண்ணம் இல்லை" எனக் கூறினார் மருதநாயகம்.

முனிவரின் கர்வம் அடங்கியது. "என்னிலும் சிறந்தவர் இல்லை என மமதை கொண்டிருந்தேன். உன் கருத்தால் அது அடியோடு அழிந்தது. நான் உனது இல்லத்தில் இனி திருப்தியுடன் உண்டு ஆசி வழங்கிச் செல்கிறேன்" என்றார் முனிவர். சிடனுக்கோ மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

குடுகுடுப்பைக்காரர்

குடுகுடுகுடு குடுகுடுகுடு
குடுகுடுகுடு குடுகுடுகுடு

குடுகுடுப்பைக் காரர் குரல் அதோ கேட்டுது,
கொடுக்கட்டுமா, சின்னச் சட்டை,
எடுத்துக்குவாரா?

வாலு வச்சு தலைப்பாகை மேலே கட்டுறார்,
சேலையைத்தான் வாங்கித் தோளு மேலே
போடுறார்;

கலர் கலரா லுங்கி வேட்டி அவருங் கட்டுறார்,
கறுப்புக் கோட்டு மட்டுந்தான் நெதமும்
போடுறார்;

நெத்தியிலே பொட்டு ரொம்பப் பெரிசா
வைக்குறார்,
கூத்து வேசம் கட்டினாப் போல் குடையுங்
காட்டுறார்.

ஜக்கம்மா ஜக்கம்மா என்றே ஜபிக்கிறார்,
ஜாக்கெட் சேலை தராவிட்டால் சினந்து
சபிக்கிறார்;

நல்ல காலம் வருதுன்னு நமக்குச் சொல்கிறார்;
நல்ல காலம் அவருக்கென்று? நமக்குத்
தெரியலை!


— ஆர்.பி. சாரதி





எங்கள்


ஆபத்து!



தமிழாசிரியர், ஆபுத்திரன் பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். "ஆ என்றால் பசு; புத்திரன் என்றால் மகன்" என்று கூறினார். உடனே ஒரு மாணவன் எழுந்து "எங்க வீட்ல ஆபத்து இருக்கு சார்" என்றான். அனைவரும் திகைத்தோம். "என்ன ஆபத்து?" என்றார் ஆசிரியர். "நீங்கதானே சொன்னீங்க, 'ஆ' என்றால் பசு என்று. எங்க வீட்ல பத்து பசு இருக்குது. அதைத்தான் சொன்னேன்" என்றான். உடனே வகுப்பு முழுவதும் சிரித்தது.

– சி. ராஜசேகரன்,
ராஜபாளையம்.

எந்த வகை?



சமூக அறிவியல் பாடவேளை. முதல் நாள் நடத்திய ஐவகை நிலங்களைப் பற்றி கேள்வி கேட்க ஆரம்பித்தார் ஆசிரியர். ஒரு மாணவியை எழுப்பி, "குறிஞ்சி, முல்லை எவ்வகையைச் சேர்ந்தது?" என்று கேட்டார். அவள் "குறிஞ்சி, முல்லை மலர்கள் வகையைச் சேர்ந்தது" என்றாள். எல்லோரும் சிரித்தோம். உடனே சுதாரித்துக் கொண்டவள் "டீச்சர் நேற்று நான் பள்ளிக்கூடம் வரலை" என்றாள். ஆசிரியரும் கோபத்தை மறந்து உட்காரச் சொன்னார்.

– சு. சரண்யா, ஒன்பதாம் வகுப்பு
'அ' பிரிவு,
அரசினர் மகளிர் மேல் நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.

எத்தனை டிகிரி?


கணித ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த ஆசிரியர் அவனை எழுப்பி," வட்டத்திற்கு எத்தனை



வீட்டில் ஆபத்து!

குளித்தாயா?


நான் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது குளிக்காமல் யாரும் பள்ளிக்கு வரக்கூடாது என்று ஆசிரியர் கூறியிருந்தார். தினமும் ''குளிக்காதவர்கள் உண்மையைச் சொல்லி விடுங்கள். இல்லையென்றால் யார், யார் குளிக்கவில்லை என்பதைக் கண்டுபிடிக்கும் கருவியை பெட்டியிலிருந்து எடுத்து வைத்து விடுவேன்'' என்பார். எனக்கு அந்தக் கருவியைப் பார்க்க ஆசை வந்தது. ஒரு நாள் குளிக்காமல் சென்றேன். ஆசிரியர் என்னிடம் கேட்டார். ''சார்! நான் குளிச்சுட்டேன். வேணும்னா கருவியை எடுங்க, அது கண்டுபிடிக்கட்டும்'' என்றேன். உடனே ஆசிரியர் தனியாக அழைத்து அப்படி எதுவும் இல்லை எனக் கூறி உட்கார வைத்தார்.



– ப. ராமகிருஷ்ணன்,
காயக்காடு.

மதிக்கிறேன்!

பள்ளியில் உணவு இடைவேளையின் போது என் தோழி சாப்பிட வெகு நேரம் ஆகும். ஒரு நாள் "ஏன் ரொம்ப மெதுவா சாப்பிடறே?" என்று கேட்டேன் நான். "நான் பள்ளியின் விதிமுறைகளை மதிக்கிறேன்" என்றாள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "உணவு இடைவேளை நமக்கு அரை மணி நேரம். நீங்களோ பத்து நிமிடத்தில் சாப்பிட்டு விடுகிறீர்கள்" என்று விளக்கமும் அளித்தாள்.




– எஸ். பிரியா,
பத்தாம் வகுப்பு,
அரசினர் மகளிர் மேல் நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.

டிகிரி?" என்று கேட்டார். அவன் "180 டிகிரி'' என்று கூறினான். "வட்டத்திற்கு 360 டிகிரி என்று கூட தெரியலை. இதுல வேடிக்கை தேவையா?" என்று கோபத்துடன் கேட்டார். உடனே அவன், "நீங்க சின்ன வட்டத்திற்குக் கேட்கிறீங்கன்னு நினைச்சு சொல்லிட்டேன் சார்'' என்றானே பார்க்கலாம்!


– எம். லோகேஷ்,
எட்டாம் வகுப்பு,
செ.ம.மே.நி. பள்ளி,
தாரமங்கலம்.

என்ன ஆகும்?

அறிவியல் ஆசிரியர் புவிஈர்ப்பு விசையைப் பற்றி பாடம் நடத்தும் போது, "பேனாவைக் கீழே போட்டால் என்ன ஆகும்? என்று கேட்டார். அதற்கு, ஒரு மாணவி எழுந்து "பேனாவைக் கீழே போட்டால் உடைந்து விடும்" என்று கூற அனைவரும் சிரித்தோம். உடனே ஆசிரியர், ''அவ பெரிய ஜோக் சொல்லிட்டாள். நீங்க சிரிங்க. பேனாவை புவி ஈர்த்துக் கொள்ளும்'' என்று கூறினார்.



- மா.முத்துச் செல்வி, பத்தாம் வகுப்பு,
அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி,
ஆண்டிபட்டி.



வன்னி இலை, மந்தார மலரால் பூஜை!

ஔரவ முனிவருக்கும் சுமேதைக்கும் பிறந்தவன் சமி. சௌனக ரிஷியின் சீடன் மந்தாரனுக்கு அவளைத் திருமணம் செய்து கொடுத்தனர். மனைவி சமியுடன் பெற்றோரைக் காண வந்தான் மந்தாரன்.

வழியில் ப்ருசுண்டி முனிவரைப் பார்த்து இருவரும் அடக்கமில்லாமல் கேலி செய்து நகைத்தனர். காரணம் ப்ருசுண்டி ரிஷி விநாயகப் பெருமானைப் போல் முகத்தில் தும்பிக் கையைப் பெற்றிருந்தார். இவர்களின் கேலிச் சிரிப்பு முனிவரை கோபப் படுத்தியது. ''மரமாகப் போகக் கடவது'' என்று சபித்து விட்டார். இருவரும் அஞ்சி நடுங்கி முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்கி தங்கள் பிழை பொறுக்குமாறு வேண்டினர். 'சாப விமோசனம் எப்போது' எனக் கேட்டனர்.

முனிவரும் மனம் இரங்கி, "எந்தத் துதிக்கையைப் பார்த்து நகைத்தீர்களோ அந்த துதிக்கைக் கடவுளான விநாயகர் உங்கள் நிழலில் குடியிருக்கும்போது நீங்கள் சாப விமோசனம் பெறுவீர்கள்!" என்று கூறினார்.

முனிவர் சாபப்படி சமி வன்னி மரமாகவும் மந்தாரன் மந்தார மரமாகவும் ஆனார்கள்.


ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்த சௌனக ரிஷி ஔரவரை சந்தித்து நடந்

ததைச் சொன்னார்.

மகன், மருமகனுக்காக ஔரவரும், சீடனுக்காக சௌனகரும் கணபதியை மனதில் தியானித்து பன்னிரண்டு வருஷ காலம் தவமிருந்தனர்.

கணேசர் பத்து கைகளோடு சிம்மவாகனத்தில் தரிசனம் தந்தார். இருவரும் சாப விமோசனம் வேண்டினர்.

"பக்தர்களே! எனக்குச் செய்யும் அபராதம் சிறியது. என் தொண்டர்களுக்குச் செய்யும் அபராதம் பெரியது. தண்டகாரண்யத்திலே விப்ரதன் என்ற வேடன் உயிர்க்கொலை புரிந்து வந்



தான். ஒரு நாள் ஒரு மனிதனை விரட்டி வரும் சமயம் களைப்புற்றான். அங்கேயுள்ள ஒரு குளத்தில் இறங்கி கைகால் கழுவி நீர் அருந்தினான்.

''அங்கே எனது ஆலயம் ஒன்றுண்டு. முற்கல ரிஷி ஆலய தரிசனம் செய்து வெளியே வந்தார். விப்ரதன் அவரை வெட்ட வாளை ஓங்கிக் கொண்டு போனான். அவர் 'ஹூம்' என்ற சப்தத்துடன் உற்றுப் பார்த்தார்.


ஆர். பொன்னம்மாள்

"அவன் அடங்கி ஒடுங்கினான். தனது தீய செயல்கள் அவனை வாட்டின. கண்ணீர் பெருக அவரது காலடியில் விழுந்து, "மகா முனிவரே! தங்கள் பார்வை என் அம்பையும், வாளையும் விட வலியது. தாங்கள்தான் எனக்கு நல்வழி காட்ட

வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

"முனிவர் அவனைப் பொய்கையில் நீராடி விட்டு வரச் சொன்னார். முழு முதல் கடவுளான விநாயகரின் நாமத்தை உபதேசித்தார். ஒரு காய்ந்த கம்பைக் கொடுத்தார். இதை நல்ல இடத்தில் ஊன்றி நீரூற்றிக் காத்துவா. இது துளிர் விடுகிற வரை விநாயக மந்திரத்தை விடாமல் ஜபித்துக் கொண்டிரு. விநாயகப் பெருமான் அருளால் அனைத்தும் சித்திக்கும்" என்றார்.

'விப்ரதனும், இது காய்ந்த கம்பாயிற்றே! துளிர் விடுமா?' என்றெல்லாம் தர்க்கம்



"நமது பள்ளியில் மூன்று மாடிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மாடிக்கும் பத்து படிகள். மூன்றாவது மாடிக்குப் போக மொத்தம் எத்தனை படிகள் ஏற வேண்டும்?"

"அத்தனை படிகளையும்தான் சார்!"

– எல். கோபாலகிருஷ்ணன்

செய்து கொண்டிராமல் குருநாதர் சொன்னபடி நல்ல இடத்தில் கம்பை நட்டு நீரூற்றி கவனமாகப் பாதுகாத்தான். பலரும் அவனைப் பைத்தியம் என்று நையாண்டி செய்தனர். அவனோ எதையும் லட்சியம் செய்யவில்லை!

"இவ்வாறு ஆயிரம் வருடங்கள் சென்றன. புண்ணிய பலத்தால் விப்ரதனின் ஆயுள் வளர்ந்து கொண்டே சென்றது. அவன் குடும்பத்தினர் மடிந்தனர். அவனுக்கு மரணம் ஏற்படவில்லை.

"ஒரு நாள் கம்பிலே இரண்டு துளிர் விட்டிருந்ததைக் கண்ட விப்ரதன் ஆனந்தக் கூத்தாடினான். அப்போது முற்கல முனிவரும் அங்கு வந்தார். விப்ரதனின் உறுதியைப் பாராட்டி, தன் கமண்டல நீரை அவன் மேல் தெளித்தார். விப்ரதனின் புத்தியில் வேத வேதாந்தங்களும் இதிகாச புராணங்களும் அணி வகுத்து நின்றன. அது மட்டுமா?

"புருவ மத்தியில் ஒரு தும்பிக்கையும் தோன்றியது. படிக்காமலே பாடங்கள் வர வேண்டுமென்றால் உபரியாக வரும் சின்னங்களையும் ஏற்கத்தானே வேண்டும்?

"ஆனால் விப்ரதன் தும்பிக்கையைக் கேவலமாக நினைக்காமல் பெருமையாகவே நினைத்தான். முனிவர் கமண்டல நீரை கம்பின் மேல் தெளிக்க அது மேலும் துளிர்த்தது.

"இன்னும் ஆயிரம் ஆண்டுகள் இந்தக் கற்பக விருட்சத் தடியில் தவம் செய்" என்று சொல்லிச் சென்றார் முனிவர்.

"மேலும் ஆயிரம் வருஷங்கள் 'ஓம்' என்று மட்டும் சொல்லித் தவமிருந்தான் விப்ரதன். முகத்தில் தும்பிக்கை இருந்ததால், 'ப்ருசுண்டி' என்று அனைவரும் குறிப்பிடலாயினர்.

"நானே வந்து, 'என்ன வரம் வேண்டு மென்று கேட்டேன். ப்ருசுண்டி 'என் தரிசனமே வர'மென்று மெய் மறந்து கூறினான்.

"அப்பேற்பட்ட என் பக்தனை அவமதித்தது பொறுக்காமல் அவன் நாவில் இருந்து சாபத்தைத் தந்தவனே நான்தான். ஆனாலும் நீங்களும் என் பக்தர்கள் தானே!" என்று கூறி அவர்கள் வேண்டுகோளின்படி அந்த மரங்களின் நிழலில் எழுந்தருளினார்.

இருவரும் சாப விமோசனம் பெற்றனர். ஔரவர் சூக்ஷும வடிவெடுத்து வன்னி மரத்தில் கலந்தார். தேவர்களுக்கு அவிர் பாகம் பெற்றுக் கொடுக்கும் பெருமையை ஔரவருக்கு அருளினார் கணபதி. அதைத்தான் 'சமிகர்ப்ப'மென்று சொல்கிறார்கள்.

அது முதல் வன்னி இலையாலும், மந்தார மலராலும் பூஜிப்பது விநாயகருக்கு உகந்ததாயிற்று.



இந்த மாதம் முதலில் நாம் பார்க்கப் போவது 'சிறுவர்க் கேற்ற மணிக்கதைகள்'. இந்த நூலை எழுதியிருப்பவர் பி.எல். சுப்பு. பரம்பரைக் கதைகள், நாடோடிக் கதைகள், நகைச்சுவைக் கதைகள், புத்திக் கூர் மையை வெளிப்படுத் தும் கதைகள் என ஒரு கலவையான அரிய லையே படைத்திருக்கிறார் ஆசிரியர். ஒவ் வொரு கதைக்கும் ஒரு படம் இருப்பது கூடுதல் சிறப்பு.

அடுத்த புத்தகம் வாண்டுமாமா எழுதிய 'க்விஸ் க்விஸ் க்விஸ்.' தான் ஆசிரியராக இருந்த பத்திரிகைகளில் பல புதிய படைப்பு களை வெளியிட்டு வாசகர்களை ஆச்சரியப் பட வைத்தவரின் நூல். வினாடி வினா நடத்துவோருக்கும் மாணவர்களுக்கும் ஏற்ற அருமையான வழிகாட்டி நூல்.

தற்காப்பிற்கு ஏற்ற கலை,
தமிழர்களின் சிலம்பக்கலை,
கற்பதற்கு உரிய கலை,
காலமெல்லாம் வாழும் கலை

என இந்தப் பாடலை 'இளைஞர்களுக் கேற்ற இனிய பாடல்' என்ற நூலில் எழுதி யிருப்பவர் வி.ஜி. சந்தோசம். தெய்வங்கள், தலைவர்கள், மதங்கள், தமிழின் சிறப்பு என பல பொருள்களில் பாடல்களை எழுதியிருக்கிறார்.

பள்ளியில் படிக்கும்போது எல்லோராலும் பாராட்டுப் பெற முடியாது. அத்தகையவர் களுக்குத் தன்னம் பிக்கை ஊட்டும் விதமாக அமைந் துள்ளது பால அமுதா எழுதிய 'பள்ளி வாழ்க்கையில் பாராட்டுப் பெறுவது எப்படி?' என்ற நூல்-ஆசிரியர்களிடம் நன் மதிப்பைப் பெறுவது, நல்ல நண்பர்களை அடைவது, விளையாட்டு, பேச்சுத் துறைகளில் சிறந்து விளங்குவது என எல்லாவற்றையும் திட்டமிடவும் செய்து காட்டவும் வழி





பள்ளி வாழ்க்கையில் பாராட்டுப் பெறுவது எப்படி?

காட்டியாக விளங்குகிறது இந் நூல்.


– ரே

• சிறுவர்க்கேற்ற மணிக்கதைகள், பி.எல். சுப்பு, பக். 112, ரூ. 21/- பழனி நிலையம், 11. டி.டி.கே. சாலை, சென்னை – 14.

• க்விஸ், க்விஸ், க்விஸ் – இரண்டாம் புத்தகம், வாண்டுமாமா, பக். 192, ரூ. 70/- கங்கை புத்தக நிலையம், சென்னை – 17.

• இளைஞர்களுக்கேற்ற இனிய பாடல்கள், வி.ஜி. சந்தோசம், பக். 96, ரூ.14, திருவரசு புத்தக நிலையம், 13. தீனதயாளு தெரு, சென்னை – 17.

• பள்ளி வாழ்க்கையில் பாராட்டுப் பெறுவது எப்படி? பால அமுதா, பக். 192, ரூ. 36/- மணிமேகலை பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை – 17.




பளிச்சிடும் மின்னல்

மின்னல்கள் ஒரு நாளைக்கு 40000த்திலிருந்து 80000 தடவைகள் பூமியைத் தாக்குகின்றன.

ஒருவரைத் தாக்கிய மின்னல் அத்தோடு நில்லாமல் அருகே இருப்பவரையும் தாக்கும்.


இது போன்ற நேரங்களில் தங்களைக் காத்துக் கொள்ள விரும்புவோர் உடைகளில், உடலில் உலோகத் துண்டுகள் (ஹேர்பின், ஸ்கூல் பேனா போன்றவை) இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும்போது மரத்தின் அடியில் நிற்கக் கூடாது. ஈர மரங்கள் மின்னலை வரவேற்கும்.



கோபுரம் சாயாது தடுக்க...

1817-ம் ஆண்டில் பைசா நகரத்துக் கோபுரம் எவ்வளவு சாய்ந்திருக்கிறதென்று கணக்குப் பார்த்தார்கள். அதன் பிறகு 133 ஆண்டுகள் கழித்து அளந்து பார்த்ததில் மேலும் மூன்றரை அங்குலம் சாய்ந்திருப்பதாகத் தெரிந்ததாம்.



இந்த அளவிலேயே கோபுரம் சாய்ந்து கொண்டு போனால் இன்னும் முன்னூறு ஆண்டுகள் வரையில் மட்டுமே தாக்குப் பிடிக்கும். பிறகு நிற்க முடியாமல் கீழே விழுந்து விடும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

அதாவது 2250ம் ஆண்டில் அது கீழே விழுந்து விடலாம். அதனால் இத்தாலிய என்ஜினியர்கள் இந்தக் கோபுரம் சாய்ந்து விடாமல் நிற்க வேண்டி அதிக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.




24 மணி

இப்போது நாம் சர்வ சாதாரணமாக ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றும் ஒரு டஜனுக்கு 12 எண்ணிக்கை என்றும் சொல்கிறோம். இந்த இரண்டையும் முதன்முதலில் கண்டுபிடித்தவர் கி.மு. 529-ல் இருந்து 558வரை பாரசிக நாட்டை ஆண்ட மன்னன் சைரஸ் என்பவர்தான்!

ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்.

முத்து

'ஆளி' எனப்படும் உயிரினத்தின் சிப்பியினுள் முத்து பிறக்கிறது. சிப்பியினுள் சிறு மணலோ, புழுவோ புகுந்தால் ஆளிக்கு உறுத்தும். அப்



பொருளால் தீங்கு நேராமல் தன் திசுக்களிலிருந்து ஒருவகை நீரைச் சுரக்கும். அந்நீர் அப்பொருளைச் சுற்றி அடுக்கடுக்காகப் படியும். வெள்ளை, சிகப்பு, நீலம், கறுப்பு ஆகிய நிறங்களில் முத்துகள் கிடைக்கின்றன. வெண்மையாகவும் உருண்டையாகவும் அமைந்த முத்தே சிறந்தது.

என். கௌரி, சென்னை - 68.



நாம் வாழும் உலகில் ஏறக்குறைய 10 லட்சம் வகை மிருகங்களும் 8 லட்சம் வகை பூச்சிகளும் 30 ஆயிரம் வகை மீன்களும் 9 ஆயிரம் வகை பறவைகளும் 2½ லட்சம் வகை தாவரங்களும் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆதாரம்: மாணவர் அறிவியல் களஞ்சியம்

- நெ. இராமன்

பல்கலைக் கழகம்

இந்தியாவில் மிக நீண்ட காலமாக இயங்கி வந்த பல்கலைக் கழகம் நாளந்தா பல்கலைக் கழகம். கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து இயங்கி வந்த இந்தப் பல்கலைக் கழகம் முகமது கோரியின் படைத் தலைவனால் அழிக்கப்பட்டது.



இலக்கணம், இலக்கியம், மருத்துவம், தர்க்க சாஸ்திரம், அறிவியல் போன்ற பல பாடங்கள் நடத்தப்பட்ட இந்த பல்கலைக் கழகத்தின் அழிவுச் சின்னங்கள் இன்றும் பீகாரில் காணப்படுகின்றன.

– இரா. கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை



அட! அப்படியா!


வீட்டிலும் நடக்கிறோம். வெளியிலும் நடக்கிறோம். 60 ஆண்டு வாழும் ஒருவர் மொத்தம் எவ்வளவு தூரம் நடக்கிறார் தெரியுமா? 2.5 லட்சம் கிலோமீட்டர். இது பூமியை 4 முறை சுற்றி வருவதற்குச் சமம்.

– எஸ்.பி. சோமநாத் சர்மா, சென்னை – 119

செஞ்சிலுவைச் சங்கம்

ஹென்றி டுனான்ட் என்பவர் செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவினார். போரில் காயம் பட்டோர், புயல், வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டோர் ஆகியவர்களுக்கு உதவுவதுதான் இச்சங்கத்தின் நோக்கம். இச்சங்கத்தை நிறுவியதற்காக 1910 ஆம் ஆண்டு ஹென்றி டுனான்ட்டுக்கு நோபல் பரிசு கிடைத்தது.

– க. பூங்கொடி, சித்தோடு





பாலைவனங்களில் சில சமயம் பேய் மழை பெய்வதுண்டு. ஆனால் மழை நீர் தரையை எட்டுவதற்கு முன்பே ஆவியாகி விடும்!

• சிலி, அர்ஜென்டைனா நாடுகளுக்கிடையே ஓடும் ஒரு ஆற்றின் நீர் புளிப்பாக இருக்கிறது.


• மிசிசிபியின் கிளை நதியான பைச்சாமுலாவின் நீரில் மாலை நேரத்தில் ஒருவித இசை தவழ்ந்து வருகிறது.

ஆதாரம்: அரிய செய்திகள் என்ற நூலிலிருந்து

– ஆர். பிரகாசம், மருதநாடு.

இறகுப் பேனா!

பழங்காலத்தில், பறவையின் இறகுகளை அடி வார முனை சீவி மையில் தொட்டுப் பேனாவைப் போல் எழுதும் வழக்கம் நடைமுறையில் இருந்து வந்தது. இவ்வாறு எழுத்தர்கள், அரசுச் செயலாளர்கள் எழுதி வந்தனர். அந்த இறகுகள் எந்த பறவையினுடையவை தெரியுமா? குவெயில்நாட் என்னும் பறவையின் சிறகுகளே ஆகும். சிறகுப் பேனாவை, குவெயில் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள்.



ஆதாரம்: உலகத்துப் பறவையினங்கள்

– எம்.எஸ். உம்மு அம்மாரா, லால்பேட்டை

உங்களுக்குத் தெரியுமா?

● தென் ஆப்பிரிக்காவில் உள்ள 'கிம்பெர்லி' வைரச் சுரங்கம் உலகிலேயே மிகப் பெரியது.

● உலகிலேயே மிகப் பெரிய பிரமிடுகள் எகிப்தில் உள்ளன.

● உலகிலேயே மிகப் பெரிய கோபுரம் பாரீஸ் நகரில் உள்ள 'ஈஃபெல் டவர்'தான்.

– பி. சதீஸ்குமார், கருவம்பாளையம்.

எலிக்கு நன்றி!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி – 1
இடம் : பிரேம் வீடு

பிரியா : ப்ரேம்! நானும் ஒரு வாரமா கவனிச்சுக்கிட்டிருக்கேன்! தினமும் எதையோ தேடிக்கிட்டிருக்கியே... எதைத் தேடறே?

பிரேம் : ஒரு நோட்டுப் புத்தகத்தைத் தேடிக்கிட்டிருக்கேன். எங்கே வச்சேன்னு தெரியலே...!

பிரியா : ரொம்ப முக்கியமான நோட்டுப் புத்தகமோ?

பிரேம் : ஆமாம்! விசுவோட விஞ்ஞானப்பாட நோட்டுப் புத்தகம். ரெண்டு மாசம் முன்னால நான் நாலு விஞ்ஞான வகுப்புகளுக்குப் போகலே... அதுக்குண்டான பாட விளக்கங்களை எழுதிக்கத்தான் விசுகிட்டேயிருந்து அவன் நோட்டை வாங்கிக்கிட்டு வந்தேன். ஒரு வாரமா அதைத்தான் தேடிக்கிட்டிருக்கேன்.

பிரியா : எப்போ வாங்கிக்கிட்டு வந்தே?

பிரேம் : ஒரு மாசம் முன்னால...

பிரியா : ஐயோ ஒரு மாசமாவா விசு நோட்டை நீ வச்சுக்கிட்டிருக்கே! இரண்டே நாள்லே எழுதிட்டுத் திருப்பிக் கொடுத்திருக்கலாமில்லே? விசுவும் நோட்டைப்பத்தி இதுவரைக்கும் உன்னை எதுவும் கேட்கலையா?

பிரேம் : கேட்கலே... இப்போ அந்த நோட்டு தொலைஞ்சே போச்சு... நோட்டுக்காக விசு என்னைத் தேடிட்டு வந்தா என்ன சொல்றதுன்னு புரியலே. விஞ்ஞானப் பரீட்சை வேற வருது. நோட்ஸை எப்பவோ எழுதி முடிச்சுட்டேன். கொடுக்கத்தான் தாமதமாயிடுச்சு!

பிரியா : ஒருத்தர்கிட்டேயிருந்து வாங்கிட்டு வந்த நோட்டுப்புத்தகங்களை உடனே திருப்பித் தர வழக்கம் உங்கிட்டே கிடையாதே!

அம்மா : நாமதிச்சா இப்படித்தான் ஏதாவது நடக்கும். உனக்கு வாங்கிட்டு வந்த பொருளைத் திருப்பிக் கொடுக்கறதுன்னா சோம்பேறித்தனம் வந்துடும். இல்லேன்னா ரெண்டு நாள் கழிச்சு மெதுவா எழுதிட்டுக் கொடுக்கலாம்னு நினைப்பே... இப்படி நீ தேடறது முதல் தடவையில்லே.. சரி, சரி, நல்லா தேடு!

பிரியா : எனக்கென்னவோ



நோட்டை நீ வேறு யாருக்கோ கொடுத்திருப்பேன்னுதான் தோணுது.

காட்சி – 2
இடம் : தெரு

குமார் : டேய் விசு! என்னடா இது? இன்னிக்கு இவ்வளவு மந்தமா விளையாடிட்டே? விக்கெட்டும் எடுக்கலே, ரன்னும் ஜீரோ! உனக்கு என்ன ஆச்சு?

சதீஷ் : ஒரு வாரமாவே விசு ஒரு மாதிரியாதான்டா இருக்கான்! டேய் விசு, ஏண்டா சிரிக்கக் கூடமாட்டேங்கறே?

விசு : இல்லேடா... என்னோட விஞ்ஞான நோட்டை எங்கே தொலைச்சேன்னு தெரியலே! அந்த நோட்டுலே நிறைய 'நோட்ஸ்' எழுதியிருக்கேன். மாதப் பரீட்சை வேற வருது!

குமார் : யாருக்காவது கொடுத்திருப்பே...

சதீஷ் : ஆமாம், நீதான் யார் கேட்டாலும் உடனே கொடுத்துருவியே...

விசு : யாருக்கும் கொடுத்ததா நினைவில்லே. எங்கேயோவது தொலைச்சிருப்பேன்னுதான் நினைக்கறேன். நோட்டு என் கைக்குத் திரும்பக் கிடைச்சப்புறம்தான் உங்களோடு கிரிக்கெட் விளையாட வருவேன்.

காட்சி – 3

இடம் : பிரேம் வீடு

குமார் : பிரேம்! பிரேம்!

பிரேம் : என்னடா குமார்?

குமார் : டேய், விசு பாவம்டா! அவனோட விஞ்ஞான நோட்டு காணோமாம்! எங்கே தொலைச்சானோ தெரியலே! முன்னே மாதிரி சிரிச்சுப் பேச மாட்டேங்கறான். நோட்டு கிடைச்சப்புறம்தான் கிரிக்கெட் விளையாட வருவேன்னு சொல்லிட்டான்.

பிரியா : ம்... அப்படியா? அவன் நோட்டை யார் கிட்டேயாவது கொடுத்ததா சொன்னானா?

குமார் : அது அவனுக்கு நினைவில்லே... ஆனா நோட்டு போனதைப்பத்தி ரொம்ப வருத்தப்பட்டுக்கிட்டிருக்கான். அவனுக்குப் பதிலா நாளையிலேயிருந்து நீ



கிரிக்கெட் ஆட வர்றியா?

பிரேம் : ம்... வந்து.. இல்லேடா நானும் வரலே...

குமார் : சரிடா! வரேன்!

பிரியா : ப்ரேம்! பார்த்தியா? உன்னோட தாமதத்தாலே தவறு நடந்திருக்கு. நோட்டு கிடைக்காததால விசுவோட மனநிலை எப்படி மாறியிருக்கு பாரு. நல்லா யோசனை பண்ணிப்பாரு. விசுவோட நோட்டை எங்கே கோட்டை விட்டே?

பிரேம் : எப்படிப் போச்சுன்னு தெரியலே. இப்பவே நான் விசு வீட்டுக்குப் போய், நான்தான் அவன் நோட்டைத் தொலைச்சுட்டேன்னு சொல்லிடறேன்.

பிரியா : வேண்டாம். நோட்டு தொலைஞ்சு போச்சுங்கறதை விசுவால தாங்கிக்க முடியாது. நீயே நல்லா நினைவு படுத்திப்பாரு. யாருக்காவது கொடுத்திருப்பே!

காட்சி – 4
இடம் : விசு வீடு

வித்யா : விசு! என்னண்ணா சும்மா யோசிச்சுக்கிட்டிருக்கே? காணாமற்போன நோட்டைப் பத்திதானே?

விசு : ஆமாம்!


வித்யா : சரி, சரி இப்போ ஹாலுக்கு வா! அப்பாவும் அம்மாவும் வீடியோ போட்டுப் பார்த்துக்கிட்டிருக்காங்க. நாமும் போய்ப் பார்க்கலாம்.

விசு : என்ன வீடியோ?

வித்யா : ஒரு மாசம் முன்னால நம்ம அக்கா குழந்தைக்குப் பிறந்த நாள் நடந்தது இல்லே? அப்போ எடுத்த வீடியோவைத்தான் இப்போ போட்டுப் பார்த்துக்கிட்டிருக்காங்க! வா... வா!

அம்மா : வீடியோ நல்லா வந்திருக்கு! வித்யா, அதோ பார் நீதான் வீடியோவுக்காக முன்னாடி முன்னாடி வந்து நின்னுக்கிட்டிருக்கே!

வித்யா : போங்கம்மா! கிண்டல் பண்ணாதீங்க. விசு! அதோ நீ கூட நின்னு சிரிச்சுப் பேசிக்கிட்டிருக்கே பார்! பிரேம்தான் உங்கிட்டே பேசிக்கிட்டிருக்கான். அதோ பாரு, நீ ஏதோ நோட்டை ப்ரேம் கிட்டே கொடுத்துக்கிட்டே பேசிக்கிட்டிருக்கே.



''நாட்டில் பாலும் தேனும் பெருகி ஓடினால் எப்படி இருக்கும்?''

''தரையெல்லாம் பிசுபிசுன்னு இருக்கும்!''

– எஸ். மோகன்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

விசு : வித்யா, இப்பத்தான் எனக்கு நினைவு வருது. இந்தப் பிறந்த நாளின் போதுதான், தற்செயலா, ப்ரேமும் நோட்டு வாங்கிக்கிட்டுப் போக நம்ம வீட்டுக்கு வந்திருந்தான். நானும் பல வேலைகளுக்கு நடுவிலே நோட்புக்கை எடுத்துக் கொடுத்தேன். அதை இதுவரைக்கும் அவன் திருப்பிக் கொடுக்கலே...

வித்யா : அப்போ உடனே எழுந்திரு! வா, பிரேம் வீட்டுக்குப் போகலாம். நானும் பிரியாவைப் பார்க்கணும்.

காட்சி – 5
இடம் : பிரேம் வீடு

பிரியா : டேய் ப்ரேம்! நம்ம அறைக்குள்ளே ஒரு எலி வந்திருக்கு விரட்டுடா!

பிரேம் : எங்கே, எங்கே காட்டு!

பிரியா : அதோ பீரோவுக்கு அடியிலே...

பிரேம் : அந்தக் கம்பை எடு... உஷ்... உஷ்...!

பிரியா : பிரேம், இப்போ கட்டிலுக்கடியிலே போயிருக்கு.

பிரேம் : உஷ்! உஷ்!

பிரியா : இப்போ உன்னோட புத்தக அலமாரி பின்னால போய் ஒளிஞ்சுக்கிட்டிருக்கு.

பிரேம் : பிரியா! இந்தப் பக்கம் வந்து பயப்படாம நின்னுக்க! எலி தப்பிச்சு

ஓடாம பார்த்துக்க. நான் புத்தக அலமாரியை நகர்த்தி எலியை விரட்டறேன். அ...ப்...பா! இந்த அலமாரி ரொம்ப கனமா இருக்கு. நீயும் கொஞ்சம் பிடிச்சுத் தள்ளு. ம்... ம்.... போதும். புத்தகம் சரிஞ்சு விழுந்துடப் போறது.

பிரியா : ஐயோ எலியை இங்கே காணோம்... தப்பிச்சு ஓடிருச்சு!

பிரேம் : பிரியா! இதோ பார்! விசுவோட நோட்டு கிடைச்சுருச்சு. அலமாரி பின்னாடி சுவரோரமா விழுந்திருக்கு... இத்தனை நாளா கவனிக்கலே...

அம்மா : இதுதான் நீங்க நல்லா தேடின அழகா? நல்ல வேளை... கிடைச்சிருக்கு. உடனே விசு வீட்டுக்குப் போய் கொடுத்துட்டு வா!

பிரேம் : இதோ போறேன். (விசு, வித்யா எதிரே வர) இதோ விசுவும் வித்யாவும் இங்கேயே வந்துட்டாங்க... வா விசு!

பிரியா : வா வித்யா!

பிரேம் : டேய் விசு! என்னை மன்னிச்சுடு! இந்தா உன் நோட்டு! இது ஒரு மாசமா என் வீட்டிலேதான் இருந்திருக்கு. இந்தப் புத்தக அலமாரி பின்னாடிதான் விழுந்திருந்தது. ஒரு வாரம் முன்னாடிதான் உங்கிட்டே நோட்டு இரவல் வாங்கினது நினைவுக்கு வந்தது. நோட்டு இல்லாம நீ கவலைப்பட்டதையும் தவிச்சதையும் குமார் எங்கிட்டே சொன்னான். என்னை மன்னிச்சுடு விசு!


அம்மா : ஆமாம் விசு! இவனுக்கு இரவல் வாங்கின எதையும் பத்திரமா உடனே திருப்பித்தர வழக்கம் கிடையாது. நோட்டு கொடுத்ததை நீ மறந்துட்டே. நோட்டை உடனே திருப்பித்தராம இவன் தாமதம் பண்ணிட்டான்.

பிரியா : ஆமாம் விசு! நல்ல வேளையா இன்னிக்கு ஒரு எலி பிரேமோட புத்தக அலமாரி பின்புறம் ஓடி ஒளிஞ்சுக்கிட்டிருந்தது. அதை விரட்ட அலமாரியை நகர்த்தினோம். அப்பத்தான் சுவரோரமா விழுந்திருந்த இந்த நோட்டும் எங்க கண்ணுலே பட்டுது.

வித்யா : அப்படீன்னா எல்லாருமா அந்த எலிக்குக் கோடி நன்றி சொல்லுங்க!


(சிரிப்பலைகள்)

குறுக்கெழுத்துப் புதிர் விடை



1 மெ	க	ல்	ல	ன்	■	ல்	வா	2 ச
க்	■	ப	■	ண	■	ச	■	க
கா	■	ப்	■	ர்	■	3 ஈ	■	வா
■	ளி	4 க	■	5 க	ரை	■	■	ச
ல்	6 ப	■	டு	■	7 சு	■	8 ரோ	ம்
கோ	■	■	9 ஆ	ம்	■	ம்	10 ஜா	■
து	■	ம்	■	ய	■	த	■	11 ஆ
மு	■	ய	■	கா	■	த்	■	ழ
12 எ	ளி	13 மை	■	14 ஆ	சி	15 ர	ம	ம்

நீங்களும் மாஜிக் செய்யலாம்!



காகிதம் எரியுமா, தண்ணீர் சுடுமா?

தேவையானவை:
தண்ணீர் உறியாத சிறிய காகிதம், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, சிறிது தண்ணீர்.

எப்படி செய்வது?
காகிதத்தை நான்கு பக்கமும் மடக்கிப் பெட்டி போல் செய்து கொள்ளுங்கள். மெழுகுவர்த்தியை ஏற்றி வையுங்கள். உங்கள் நண்பர்களிடம் காகித பெட்டியைக் காட்டி "இதில் நீர் ஊற்றி மெழுகுவர்த்தி மீது காட்டினால் காகிதம் எரியுமா அல்லது தண்ணீர் சுடுமா?" என்று கேளுங்கள். எல்லோரும் 'காகிதம் எரியும்' என்பார்கள். உடனே தண்ணீருடன் இருக்கும் காகிதப் பெட்டியை மெழுகுவர்த்தி சுடர் மீது காட்டுங்கள். சிறிது நேரம் கழித்து 'காகிதம் எரியும்' என்று கூறியவர்கள் எரியாததைக் கண்டு வியப்பார்கள். தண்ணீருக்குள் கை வைத்துப் பார்க்கச் சொல்லுங்கள். தண்ணீர் சுடும்.


காரணம்: காகிதத்தை நேரடியாக தீயில் காட்டும்போது எரியும். ஆனால் தண்ணீர் மேலிருக்கும் போது காகிதத்தின் மேல் படும் வெப்பத்தைத் தண்ணீர் இழுத்துக் கொள்கிறது. அதனால் காகிதம் எரியாமல் தண்ணீர் சுடுகிறது.

கோகுலம் சுழல் கோப்பை



இந்த ஆண்டு கோகுலம் சுழல் கோப்பையைப் பெற பெரியதச்சூர், துத்திப்பட்டு, லால்பேட்டை, ஆண்டிபட்டி, மதுரை, வெள்ளோடு, சென்னையைச் சேர்ந்த பள்ளிகளுக்கிடையே கடும் போட்டி நிலவி வருகிறது.

இந்த ஏழு பள்ளிகளுடன் உங்கள் பள்ளியும் போட்டியிட இப்போதும் கூட வாய்ப்பு உள்ளது. உங்கள் பள்ளியிலிருந்து படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!



• ஸ்டெபி கிராப்



விடை பெற்றார்! ஸ்டெபி!

சக மாணவர்களிடம் 'உங்களுக்குப் பிடித்த டென்னிஸ் வீராங்கனை யார்?' என கேட்டுப் பாருங்கள். பெரும்பாலானோர் சொல்லும் ஒரே பதில் 'ஸ்டெபி கிராப்'

1969 ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்த ஸ்டெபிக்கு தற்போது வயது முப்பது.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்ற பழமொழிக் கேற்ப இவருக்கு மூன்று வயதிலேயே டென்னிஸ் மீது ஆர்வம். இவரது தீராத ஆர்வத்தைக் கண்ட ஸ்டெபியின் அப்பா தனி கவனம் செலுத்தி அவரை உற்சாகப் படுத்தி ஊக்கமளித்தார். ஸ்டெபிகிராப் அயராத உழைப்பாலும் பெற்றோரின் வழி காட்டுதலாலும் தனது பதினான்காவது வயதிலேயே பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றார். இதன் மூலம் மிக

இளம் வயதிலேயே பட்டம் பெற்ற பெருமையைப் பெற்றார் ஸ்டெபி.

1985 ஆம் ஆண்டு கிறிஸ்ட் எவர்ட், மார்ட்டினா நவரத்திலோவாவுக்கு அடுத்தபடியாக உலக தர டென்னிஸ் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பெற்றார்.

தனது 17 வருட டென்னிஸ் வாழ்க்கையில் 22 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் உட்பட 107 பட்டங்களை வென்றுள்ளார் ஸ்டெபி. இதில் ஒலிம்பிக் போட்டி தங்கப் பதக்கமும் உண்டு.

இதுவரை மூன்றுமுறை விம்பிள்டன் பட்டத்தை வென்றிருக்கிறார். 1990 ஆம் ஆண்டு ஸ்டெபிக்கு முக்கியமான ஆண்டு. அந்த ஆண்டில் மட்டும் பத்து பட்டங்களை வென்றார்.

377 வாரங்கள் உலகின் முதலிட டென்னிஸ் வீராங்கனையாக இருந்திருக்கிறார் ஸ்டெபிகிராப். டென்னிஸ் மூலம் இதுவரை இவர் பரிசாகப் பெற்ற தொகை ரூ. 86 கோடி.

இடைவிடாமல் தொடர்ந்து பல ஆண்டுகளாக அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டிருந்த ஸ்டெபி 1997ஆம் ஆண்டு காலில் ஏற்பட்ட காயத்தால் 8 மாதங்கள் விளையாடாமல் இருந்தார். அதற்கு பின் விளையாட்டில் ஸ்டெபி தோல்விகளைச் சந்திக்கவும் நேரிட்டது.

ஸ்டெபியால் இனி விளையாட முடியாது என சிலர் எண்ணிக் கொண்டிருந்த வேளையில் மீண்டும் பிரெஞ்ச் ஓபனை வென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார்.

உலகெங்கும் பல லட்சக் கணக்கான ரசிகர்களைப் பெற்றிருக்கும் ஸ்டெபி கிராப் ஆகஸ்ட் 13ந் தேதி தனது ஓய்வை அறிவித்து விட்டார். அவர் இவ்வளவு சீக்கிரத்தில் ஓய்வு பெறுவார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த வீராங்கனை என டென்னிஸ் வரலாற்றில் ஸ்டெபியின் பெயர் எப்பொழுதும் இருக்கும்!

கிரிக்கெட்

அய்வா கோப்பைக்கான மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெற்றது. இப் போட்டியில் நடப்பு சாம்பியனான ஆஸ்திரேலியாவின் கையே முதலில் ஓங்கியிருந்தது. விளையாடிய போட்டிகளில் எல்லாம் வென்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தது ஆஸ்திரேலியா. இலங்கையும் இந்தியாவும் தலா ஒரு போட்டியில் மட்டுமே வென்றன. ரன் விகித அடிப்படையில் இலங்கை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இறுதிப் போட்டியில் அபாரமாக ஆடி கோப்பையைக் கைப்பற்றியது இலங்கை. ஜெயசூர்யா கேப்டன் பொறுப்பேற்று முதல் போட்டியிலேயே கோப்பையைக் கைப்பற்றி, உலகக் கோப்பை படு தோல்வி யிலிருந்து மீண்டும் அணியை நிமிர்ந்து நிற்கச் செய் திருக்கிறார்.



• ஜெயசூர்யா

இப் போட்டியில் இலங்கை வெற்றிக் குப் பெரிதும் உதவியது கலுவத்தரானா வின் 95 ரன்கள். இலங்கையின் விக்கெட் கீப்பரான இவர் ஒருநாள் போட்டியில் அதிக ஸ்டம்ப்பிங் செய்த பெருமையும் இந்தப் போட்டிகளில் பெற்றிருக்கிறார்.

சிங்கப்பூரில் இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் ஜிம்ப்பாவே அணிகள் பங்கு பெறும் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இறுதிப் போட்டியில் மேற்கு இந்தியத் தீவுகள் அணியுடன் மோதிய இந்தியா தோல்வி கண்டது.

ஏன், எப்படி?



ஞாபகம் இருக்கிறதா?

நீங்கள் உங்களுக்குத் தெரிந்த ஒருவரைச் சந்திக்கிறீர்கள். முகம் சட்டென நினைவுக்கு வந்து விட்டது; ஆனால் மூளையை என்ன கசக்கியும் அவர் பெயரை நினைவுகூற முடியவில்லை. இந்த அனுபவம் பொதுவாக எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கும். இந்த நிலைமை ஏன் ஏற்படுகிறது என்று தெரியுமா?

நம் உடலில் கண், காது, மூக்கு, வாய் மற்றும் தோல் என்ற ஐந்து புலன்கள் உண்டு. இவற்றை நாம் ஐம்புலன்கள் என்கிறோம். இவற்றின் செயல்பாடுகளாவன : பார்த்தல், கேட்டல், வாசனை அறிதல், சுவை உணர்தல் மற்றும் தொடுதல் ஆகும். உடலின் பல பகுதிகளிலிருந்து மூளைக்கு உணர்ச்சி நரம்புகள் செல்கின்றன. ஆனால் அனைத்து உறுப்புகளிலிருந்தும் மூளைக்குச் செல்லும் உணர்நரம்புகளின் எண்ணிக்கை சமமாக இருப்பதில்லை. இதில் பெரும் பகுதியை கபளீகரம் செய்வது கண்தான்! ஆம், அதுதான் உண்மை. மூளைக்குச் செல்லும் உணர்ச்சிகளில் - அதாவது செய்திச் சுருளில் - சுமார் 80 சதம், நமது சுற்றுச் சூழலிலிருந்து நாம் பெறும் செய்திகளைத் தொகுத்து பார்வைச் செய்திகளாக, கண்கள் மூலமே அனுப்பப்படுகின்றன.

மீதமுள்ள 20 சதம் செய்திச் சுருள் கேட்டல், தொடுதல், வாசனை மற்றும் சுவைச் செய்திகளாக அந்தந்த உறுப்புகளான காது, தோல், மூக்கு மற்றும் நாக்கு மூலம் அனுப்பப்படுகிறது.

ஒருவரைப் பார்க்கும் போது, முக அமைப்பும் நிறமும் அதன் உறுப்புகளான கண், காது, மூக்கு, உதடுகள், மோவாய், தலையின் உருவம், தலைமுடி என ஒவ்வொன்றும் பல கோணங்களில் முப்பரிமாண உருவத்தில் நினைவுப் பெட்டகத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஒருவரின் பெயர் பதிவுசெய்யப்படும் போது, ஒற்றைச் சொல்லில் மட்டுமே மூளையின் நினைவில் நிறுத்தப்படுகிறது. எனவேதான் ஒருவரின் பெயரைக் கேட்டு நினைவுகூரலை விட முப்பரிமாணத்தில் பார்த்த அவர் முகம் எளிதில் நினைவில் நிறுத்தப்படுகிறது.

ஒருவரின் முகம் நினைவில் நிறுத்தப்படுதல், பழக்கமான சூழலில் பதிவுசெய்யப்படாவிட்டால், அம்

முகத்தை நினைவுகூற கொஞ்சம் சிரமப்படுவோம். எனவேதான் புதிய சூழலில், கூட்ட நெரிசலில் பார்த்த முகம் அவ்வளவாக நினைவில் நிற்பது இல்லை. மூளையில் நினைவுகள் பாதிக்கப்படுவதும் அதனை மீண்டும் நினைவுக்கு அழைக்கும் செயல்பாடுகளும் கொஞ்சம் சிக்கலானவை ஆகும். எனவேதான் ஒருவர் பெயரை நினைவில் வைத்துக் கொள்வதை விட முகத்தை நினைவில் கொள்வது நமக்கு எளிதாக இருக்கிறது. இப்போது தெரிகிறதா, 'அட, அவர் முகம் நினைவில் இருக்கிறது. சட்டென்று அவர் பெயர் நினைவுக்கு வர மாட்டேன் என்கிறது' என நீங்கள் தவிப்பதன் காரணம்.

காலராவுக்குத் தக்காளி!

நம் நாட்டிலுள்ள நோய்களில் கிட்டத் தட்ட 80 சதம் நோய்கள் நீரினாலேயே ஏற்படுகின்றன. அதிலும் வயிற்றுப் போக்கு மற்றும் காலரா நோய்க்கு மிக மோசமான, சுகாதாரமற்ற நீர்தான் பிரதானமான காரணமாகும். வயிற்றுப் போக்கினால் ஏராளமான குழந்தைகள் இறக்கின்றன. (இந்தியாவில் 5 நிமிடத்தில் மூன்று குழந்தைகள் வயிற்றுப்போக்கினால் இறக்கின்றனர்) காலராவினால் பெரியவர்களும் கூட உயிரிழக்கின்றனர். வயிற்றுப் போக்குக்கு பாக்டீரியாவும் காலராவுக்கு வைரஸ் கிருமிகளும்தான் காரணம்.


வைரஸினால் ஏற்படும் நோயை, நோய் வந்தபின் குறைப்பதோ, தடுத்து நிறுத்துவதோ இயலாத காரியம். ஆனால் வைரஸ் நோய் வருமுன், தடுப்பூசி போட்டுக் காப்பாற்றலாம். முன்பெல்லாம் காலரா நோய்க்குத் தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் இப்போது தடுப்பூசி இருந்தாலும்கூட, அதனைப் பயன்படுத்துவோர் மிகக் குறைவே!

சமீபத்தில் டெல்லி பல்கலைக்கழக, தாவர மூலக் கூறியியல் மையம் மற்றும் தேசிய தடுப்பாற்றல் துறை விஞ்ஞானிகளெல்லாம் இணைந்து, காலராவுக்கு எதிரான உண்ணும் தடுப்பூசியை தக்காளி மூலம் அறிமுகப்படுத்தியுள்ளனர். காலராவை எதிர்க்கும் ஜீனை, தக்காளியின் ஜீனுக்குள் மூலக்கூறு கத்திரிக்கோலால் உயிரியல் தொழில்நுட்ப முறை மூலம் நுழைத்து, ஜீன் மாறிய புதிய வகை தக்காளியைத் தடுப்பு மருந்தாகத் தயாரித்துள்ளனர். இந்தத் தக்காளியைச் சாப்பிட்டால் காலரா வராது. இதுவே, 'காலரா தடுப்புத் தக்காளி'யாகும்! நமக்கு தடுப்பூசி என்றாலே, 'நறுக்'கென கையில் குத்தும் ஊசிதான் நினைவுக்கு வரும். இக் காலரா தடுப்பு மருந்து கஷ்டமில்லாமல் உண்ணக்கூடியது.

1977-ல் அமெரிக்க விஞ்ஞானிகள் காலராவுக்கு எதிரான தடுப்பு மருந்தாக உருளைக் கிழங்கைத் தயாரித்தனர். பச்சை உருளைக் கிழங்கைச் சாப்பிட முடியாததால், இதனைப் பயன்படுத்த சிரமமாக இருந்தது. ஏனெனில் வேகவைத்த உருளைக் கிழங்கில் தடுப்பாற்றல் இராது; வெப்பத்தால் அழிந்துவிடும். இப்போது இந்தியர்கள் கண்டுபிடித்த காலரா தடுப்புத் தக்காளியைப் பச்சையாகவே உண்ணலாம்! இந்தியர்கள் விஞ்ஞான சாதனையில் சளைத்தவர்களோ, இளைத்தவர்களோ இல்லை என்பதை உலக அரங்கில் மேடை ஏற்றி நிலைநாட்டியுள்ளனர்!



— எஸ். மோகனா



கோகுலம் க்விஸ்

1. கூடு கட்டவும் அடை காக்கவும் தெரியாத பறவை ________
2. பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் ________ நாட்டில் உள்ளது.
3. பாரமானியைக் கண்டறிந்தவர் ________
4. உலகத்தின் கூரை என அழைக்கப்படும் நாடு ________
5. அக்பர் ________ என்ற புதிய மதத்தைத் தோற்றுவித்தார்.
6. உலகிலேயே மிகச் சிறிய கண்டம் ________
7. மனித இனத்தின் அறிவியல் பெயர் ________
8. பாண்டா கரடிகள் ________ நாட்டில் வாழ்கின்றன.
9. மாலைக் கண் நோய் வைட்டமின் ________ குறைவால் ஏற்படுகிறது.
10. நீண்ட நேரம் கொண்ட ஒரு நாளை உடைய கிரகம் ________

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை -97.



இங்குள்ள பத்து கேள்விகளுக்கும் விடைகளைத் தேடி கண்டுபிடியுங்கள். விடைகளை எழுதி அனுப்புவதோடு முகவரி கூப்பனையும் ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முழு முகவரியையும் எழுதுங்கள். அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைக் கண்டிப்பாகத் தர வேண்டும். சரியான விடைகளை எழுதிய 20 பேருக்குப் பரிசு வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

முடிவு தேதி **31.10.99**

கைத்திறனைக் காட்டுங்கள்!

நவராத்திரி என்றதும் உடனே நினைவுக்கு வருவது கொலுதான். ஒவ்வொரு நாளும் வித விதமான சுண்டல் கிடைத்தாலும் அதையும் தாண்டி எல்லோருக்கும் ஒரு ஈடுபாடு இருப்பது கொலுவில்தான்!

முன்பெல்லாம் கொலு வைப்பதென்றால் பல வருடங்களாக பொம்மைகளை வாங்கி சேகரித்து பராமரிக்க வேண்டும். கொலுப் படிகளை வீட்டிலேயே தயார் செய்ய வேண்டும்.

ஆனால் இப்பொழுதெல்லாம் களிமண், பிளாஸ்டிக், கண்ணாடி மற்றும் ரப்பர் பொம்மைகள் செட்டாகவே கடைகளில் கிடைக்கின்றன. அதேபோல் கொலுப்படியும் கடைகளில் கிடைக்கிறது. எனவே கொலு வைப்பதில் உங்களின் சொந்த கலைத்திறன் வெளிப்பட வாய்ப்பே இல்லை. பொம்மைகளை உருவாக்கிய நம் கண்களுக்குத் தெரியாத கலைஞர்களின் கலைத்திறன் மட்டுமே வெளிப்படுகிறது.

பணம் செலவழித்து யார் வேண்டும் என்றாலும் கொலு வைத்து விடலாம். ஆனால் உங்கள் வீட்டு கொலு மற்றவர்களிடமிருந்து வித்தியாசப்பட வைக்க நீங்கள் முயற்சிக்கலாம். எப்படி? கொலு படிகளுக்கருகில் பூங்கா, மலைகளை உருவாக்கலாம். இவற்றைச் செய்வதற்கு அதிகம் செலவழிக்க வேண்டியதில்லை. வீட்டில் இருக்கும் உபயோகமற்ற பொருட்களைக் கொண்டு உங்களின் கற்பனைத் திறனைப் பயன்படுத்தி அழகான மலைகளையும் பூங்காக்களையும் அமைக்கலாம்.

மலை உருவாக்க சாதாரண களிமண்ணோ அல்லது அட்டைகளோ கூடப் போதும். களிமண் மலைக்கு ஈரம் காயும் முன்பே ஆங்காங்கு பச்சை வண்ணத் தாளை மெலிதாக வெட்டி ஒட்டி விடலாம். சிறிய பிளாஸ்டிக் பறவைகள், மிருகங்களை ஆங்காங்கு நிறுத்தினால் பார்க்க அழகாக இருக்கும்.

களிமண் கிடைக்காதவர்கள் அட்டையை மலை வடிவில் வெட்டி வண்ணத்தால் வரைந்து விடலாம்.

அதே போல மணலைப் பரப்பி அதன் மேல் பச்சைத் தாளைப் போட்டு பூங்கா தயார் செய்யலாம். இந்தப் பூங்காவில் தண்ணீர்த் தொட்டி, மரம், பூச்செடிகளை ஆங்காங்கு வைக்கலாம். பவுடர் டப்பா, பாட்டில் மூடிகளைக் கவிழ்த்து சேர் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தலாம்.

இப்படி நீங்கள் ஈடுபாட்டுடன் செய்யும் பொருட்களால் உங்கள் வீட்டு கொலு அதிக பாராட்டைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

கொலுவைப் பார்க்க உங்கள் உறவினர்கள், நண்பர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள் என நிறைய பேர் வருவார்கள். உங்கள் கலைத்திறனைப் பாராட்டும்போது உங்களுக்கு மட்டுமல்ல, பெற்றோர்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்.

ஒருமுறை செய்ய ஆரம்பித்தால் வருகிற ஆண்டுகளில் விதம்விதமாக செய்யலாம் என்ற ஆர்வம் உங்களுக்கு வந்து விடும்.

கொலுவில் உங்களின் மற்றொரு கலைத்திறனும் வெளிப்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதுதான் பாட்டு. இனிமையாகப் பாடத் தெரிந்தவர்கள் மட்டும்தான் பாடவேண்டும் என்பதில்லை. கட்டைக்குரல் உடையவர்கள் கூட தயங்காமல் பாடலாம். யாரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். இப்போது பாடத் தெரியாத நிறைய குழந்தைகள் பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் பாடல்களைக் கூட பாடவோ, ஒப்பிக்கவோ செய்கிறார்கள்.

இந்தக் கொலுவில் பல வித்தியாசமான முயற்சிகளைச் செய்து பாருங்கள்.

அட்டையில் : **உமா**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**





செவ்வாய் கிரகம்

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து 'மார்ஸ் க்ளோபல் சர்வேயர் ஸ்பேஸ் ப்ரோப்' என்ற விண்கலம் செவ்வாய் கிரகத்திற்கு ஏவப்பட்டிருக்கிறது. இந்த விண்கலத்தின் மூலம் செவ்வாய் கிரகத்தின் வட துருவத்தில் ஊதா நிற சூறாவளிக் காற்று வீசுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. செவ்வாய் கிரகத்தின் தட்பவெப்பம் மிக வேகமாக மாறக்கூடிய தன்மை கொண்டது. பூமியைப் போன்றே நிலப் பரப்புடையது. மழை மட்டும் பெய்வதில்லை. ஆனால் மணல் குன்றுகளின் மேல் கார்பன்டை ஆக்ஸைடு கலந்த பனித்துளிகள் படர்ந்

பெயர்த்து விடும். இச் சாதனத்தை உருவாக்கும் முயற்சியில் சென்னை ஐ.ஐ.டி கம்ப்யூட்டர் சயின்ஸ் துறை ஈடுபட்டுள்ளது.

துயரம்!

துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் இதுவரை 35,000 மக்கள் பூமிக்கடியில் புதையுண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இந்தக் கொடூரமான பூகம்பத்தில் சிக்கித் தவித்த 11 வயது சிறுமியை 80 மணி நேரப் போராட்டத்திற்குப் பின் துருக்கி ராணுவ வீரர்கள் மீட்டிருக்கின்றனர்.

இருதய மாற்றம்!

இருதயம் மற்றும் சிறுநீரகங்கள் மாற்றம்


லம் நியூஸ்!

தேவைப்படுகிற

வண்ணம் தீட்டுங்கள்



ஐந்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!




விடை: 1) பொட்டு 2) தலையில் பூ 3) நாய்க்குட்டியின் வாலின் பட்டைக் கயிறு 4) முதல் நாயின் காது 5) பெண்ணின் கைக்குட்டைக் கயிறு

''ஆவியைப் பார்த்துக்கூட நீ பயப்படலையா! எப்ப வந்தது?''

''இட்லி வேகும்போது!''

– சக்தி. சரவணன்



பிருந்தாவனம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/99 * Licensed
to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka

